உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-சஅ.] கர-௵ தை—மாசி-௴ [பகுதி. ங-ச.

Vol. 48. January—March 1952 No. 3-4.

பாண்டித்துரைத்தேவர்

———:(-:o:-):———

இவர், கல்வி அறிவு ஆண்மை வண்மை முதலிய பலசிறந்த குணங்களால் பிரஸித்திபெற்ற இராமநாதபுரம் சப்டிவிஷன் ஜமீந்தார் பொன்னுசாமித்தேவருடைய மூன்றாவதுபுத்திரரான புண்ணியபுருஷன்.

இவர் சிறுபிராயந்தொடங்கியே ஆஸ்திகபுத்தியும் அறநெறி யொழுக்கமும் வாய்மையும் தூய்மையும் மனநலமுடைமையும் தயையும் கொடையும் தாளாண்மையும் முதலான பல குணநலங் களுமுடையராய்த் தமிழிலக்கிய இலக்கண நூல்களையும், சைவ புராண சமயசாத்திரங்களையும், நல்லாசிரியர் பல்லோரிடத்துப் பயின்று 'தாமின்புறுவதுலகின்புறக்கண்டு பிறர்க்கும் அவற்றைப் பயிற்றிவந்தவர். செய்யுளியற்றும் ஆற்றலும், செவ்விய சிறந்த தமிழ்நடையிற் பொருளுரைவரையும் தேர்ச்சியும், விரிவுரை நவி லும் வன்மையும் உடையவர்.

தமிழபிமானமுடையராய் அச்சில் வெளிவராத பழந்தமிழ் நூல்களுள் மணிமேகலையும் வெண்பாமாலையும் அச்சிட்டு வெளியிடு மாறு மஹாமஹோபாத்தியாயஐயரவர்களுக்குப் பொருளுதவிபுரிந் தார். இவரியற்றிய பாடல்கள் சிவஞானமுனிவர் இரட்டைமணிமாலை யும் முருகவேள் காவடிச்சிந்தும் சிற்சில முத்தகச்செய்யுள்களுமாம்.

பன்னூற்றிரட்டும் தோத்திரத்திரட்டும் சைவமஞ்சரியும் தொகுத்துதவியவர். வைத்தியசாரசங்கிரகம், அபிதானசிந்தாமணி, தமிழ்ச்சொல்லகராதி, வில்லிபாரதம், ஞானாமிர்தம் முதலிய சிறந்த தமிழ்நூல்கள் பலவற்றைத் தக்கபண்டிதர்களால் வெளியிடுவித்தவர். பன்னூற்றிரட்டிற் கல்வியதிகாரத்துக்கு உரைவரைந்தார். அகப்பொருள்விளக்கம் என்னும் இலக்கணநூலைப் பரிசோதித்து அச்சிட்டுதவினார்.

சங்கீதசாகித்தியசாஸ்திரங்களிலும் தமிழிலும் வல்லவர்களான பண்டிதர்களில் ஒருவரேனும் இவரிடம் தகுதிக்கேற்ற பரிசு பெறாதவரில்லை.

இவர் மஹாமஹோபாத்தியாய வே. சாமிநாதையரவர்கள் முதலான பற்பல பண்டிதசிரேஷ்டர்களாற் பாடப்பெற்றவர்.

வடமொழியிலும் தமிழிலும் வல்லுநரான பலபண்டிதர்களை மாதநிவேதனங்கொடுத்தும் அவரவர் தகுதிக்கேற்ற பரிசளித்தும் உபசரித்தும் அவர்களை ஈடுபடச்செய்தவர். இவர் கற்றோரை உபசரிக்கும் உபசாரணைக்கு ஈடுபட்ட கல்வியிற்பெரிய பெருந்தகையாளரொருவர், இவரை 'உன்னும்போதெனக்கென்னினுமினியன்' என்றார்.

தமிழபிவிருத்தியில் கருத்துடையராய் ஸேதுசமஸ்தானத்தின் ஆதரவைக்கொண்டும், நாட்டுக்கோட்டை நகரத்தார் பொருளுதவி கொண்டும் தாமும் வேண்டும் பொருளுதவிபுரிந்தும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தை ஸ்தாபித்தார். அதில் வடமொழி தென்மொழி ஆங்கிலமொழி நூல்கள் அடங்கிய பாண்டியன் புத்தகசாலையும் செந்தமிழ்க்கலாசாலையும் செந்தமிழ் என்னும் மாதாந்தப் பத்திரிகையும் இனிது நடைபெற நிறுவியதன்மேலும் தனித்தமிழ்ப்பரீக்ஷை ஆங்கிலத் தமிழ்ப்பரீக்ஷைகளை வகுத்து அவற்றில் தேர்ச்சிபெறுமவர்க்குப் பட்டமும் பரிசும் வழங்கிவரச்செய்தார். இதுகொண்டே தமிழ்வளர்ச்சி தலையெடுக்கத்தொடங்கிற்று.

இச்சங்க ஸ்தாபனத்தைப்பற்றித் தமிழ்ப்புலமையிற் சிறந்த பெருந்தகையாளர் ஒருவர்,

"பிறந்தசங் கத்தை யெடுத்துயிர் கெடுத்துப்
பின்னரோர் சிறுதொனி கேட்பார்
இறந்தசங் கத்தை யெடுத்துயிர் கொடுத்தஃ
தெங்கணு முழங்கிடக் குறித்தான்
சிறந்தசங் கத்தை மேற்படுக் தொகையிற்
சிறந்தசெந் நாப்புல வீர்காள்
நிறந்தசங் கத்தை யேத்திறே னனைய
கெடுந்தமிழ்ப் பாண்டிமன் மன்னே"

என்று அருமைபாராட்டினர்.

இன்னும் இவர் உயர்தரக்கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் கற்கும் மாணவர் பலர்க்கு உபகாரச்சம்பளமுதவியும் உத்தியோகங்களளித்தும் அவரது வறுமைதீர்த்து வாழ்வித்துவந்தார். கற்றோரும் உற்றோருமாகிய பலர்க்கு இவர் செய்துவைத்த கன்னிகாதானங்களும் கிருஹதானங்களும் பூதானங்களும் பல உள.

இவர் வேடிக்கையாகப் பொழுதுபோக்கும் வேளைகளிலுங்கூட வித்துவான்களுடனிருந்தே விநோதங்களுள்ள சாதுரியகவிகளைச் சொல்லிவருவர். ஒருநாள் ஒருபாடகர் இவரிடம்வந்து ஓசிப்பொடி கேட்டு நின்றவளவில், இவர் வேடிக்கையாய் ஒருபாட்டுப்பாடி விடையளித்தார். அது,

"ஓசிப் பொடியென் றொருநா ளுனக்களித்தால்
நீசற்றும் அச்சமின்றி நித்தநித்தம்—யாசித்
தடிக்கடிசும் மாவந் தலட்டுகிறாய் சீச்சீ
பொடிக்கொடுப்ப தில்லையினிப் போ"

என்பது. இதனால் அவர் கௌரவமும் விரைவிற் கவிபாடுந்திறமும் அறியலாம்.

இன்னும் அவர் பண்டிதர்களுடன் பொழுதுபோக்குங்கால் அவரவர்க்குத் தெரிந்த பழம்பாடலாவது புதியபாடலாவது அந்தாதியாக முறையே சொல்லிவரச்செய்து தவறாது சொல்லிவருபவர்க்கெல்லாம்பரிசளிப்பர். இதுபண்டிதர்களது தமிழ்ப்பயிற்சியை வலிபெறச்செய்வதாகும்.

இப்படி இவர் பொழுதுபோக்குங்காலங்களிலும் கல்விவளர்ச்சிக்குரியசெயல்களைச் செய்துவருவர்.

இவர் தொகுத்த பன்னூற்றிரட்டுக்கு மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் அளித்த சிறப்புப்பாயிரத்தில்

'அருமறை நாவின் அந்தணர் தமக்கும்
ஆறறி காட்சிப் பேறுடை யார்க்கும்
திசைபோம் பெரும்புக ழிசைவல் லவர்க்கும்
செயிரிலாத் தேர்ச்சி வயிரியர் தமக்கும்
மற்றவை மரபிற் கற்றவர் திரட்கும்
மாதுய ரொடுவரும் ஆதுலர் தமக்கும்
அடையா வாயி லகன்கடை யுடையான்,
வாய்ந்தநுண் ணூல்பல வாய்ந்து மகிழ்ந்தே
நாவலர் பல்லோர் பாவலர் பல்லோர்
சூழும் படிதழீஇ வாழும் பெருமையன்;
அன்னமும் ஆவும் அன்னமா ணவர்பலர்க்
கனமும் தனமும் ஆடையும் மேடையும்
கொடுத்தே மிடியைக் கெடுத்தே மகிழ்வித்
தருந்தமிழ் பயிற்றிப் புரந்திடு மேன்மையன்;
தீயவெம் பிணியா லாயபஃ றுன்பிற்
காற்றா மாந்தர்க் கருந்துணை யானோன்;
இருவே றுலகத் தெனுங்குறட் கெதிரா
வருவேள்; ஒழுக்க மாண்பினில் அதிகன்;
குளிர் இன்சொல்லொடு மிளிர் குலோத்துங்கன்;
அகத்துக் கேமுனம் தொகுத்தே மென்னும்
அக்குறை யறவரும் உக்கிர பாண்டியன்;
வருத்த மகற்றும் திருத்தகுதேவன்;
களங்கமில் லாது விளக்கு பொய்யாமொழி
மெச்சியடைந்து நச்சினார்க் கினியன்;
தீதிய லாதுசெய் நீதிநூல் பலவும்
தெரிமேலவர்சொல் பரிமேலழகன்;
பொடியார்க்கு மேனி அடியார்க்கு நல்லான்;
புலவர்கள் துயர்களைக் திலகு கற்பகம்;
வந்தடை வோர்துயர் சிந்து சிந்தாமணி

மண்ணிலும் மீக்கிளர் விண்ணிலும் அமைந்த
வண்மையன் எனவே ஒண்மையி னுயர்
சீரியர் சொலமிளிர் பாரிசாதம்;
தால மாந்தரின் தாலந் துறந்தெனத்
தாலம் துறக்கும் தமிழ்த்தொன னூல்கள்
பழுதாகாவணம் பரிசோதிப்பித்
தெழுதா வெழுத்தில் இயைவித் திடுவோன்;
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணை
யாக நினைப்போர் சோகம் அகற்ற
வானினும் ஆனினும் வழங்குசெங் கரத்தான்
தேனினும் பாலினும் தித்தித் தோங்கும்
தன்பா மாலை சாற்றுவோன்; புறப்பொருள்
வெண்பா மாலை வெளிவரச் செய்தோன்;
திருந்து கவின்சேர் அருந்தமிழ் மடந்தை
அணிமேகலையாம் மணிமேகலையை
யாவரும் பெறச்செய் மாவுபகாரி;
பண்ணமை விழுச்சீர்த் தண்ணுமை யொடுகளத்து
ஏழிசையோடும் யாழிசையோடும்
எழுது மறைகள் இசைத்தே அன்பில்
தொழுது பல்லோர் சூழ்திருந் தேத்த
உருத்திர சின்னம் அருத்தியிற் றாங்கி
மனமொழி மெய்யினிற் றினமொழி வின்றி
யீசனை அன்பிற் பூசனை புரிவோன்;
சிவனடி யவரைச் சிவனென மதித்து
வேண்டிற் றதவும் விழுச்சீர்ப்
பாண்டித் துரைப்பெயர் படைத்த கோமானே'.

என்று இவர் குணவிசேஷங்கள் பலவும் விளங்க, இவரதுசரித்திரச் சுருக்கம்போல உள்ளதை உள்ளபடியே பாராட்டிப்பாடியுள்ளார்.

இவ்வாறே இவரைப் பலபுலவரும் பாராட்டிப்பாடியபாடல்கள் பலவுள. அவை இவருள்ளகாலத்திற் பாடியனவாதலால் இவரை அறியாதாரால் முகமனென்று கொள்ளுதற்கு இடமுண்டாயினும், இவர் காலஞ்சென்றபின் இவரைப்பற்றிப் புலவர்பலரும் பாடிய

இரங்கற்பாக்கள் ஆயிரக்கணக்கானவை. அவற்றுள் நூற்றுக்கணக்கான பாடல்கள் செந்தமிழில் வெளிவந்துள்ளன. அவை ஒன்றும் முகமனல்லாமையால் அவற்றால் இவர் குணாதிசயங்கள் உள்ளபடி அறியத்தகும். அவற்றுள் ஒருசில வருமாறு:—

இவர் நிரியாணமானகாலத்தைக் குறித்து, ஒருபுலவர்,

விரோதி கிருதே விருச்சிகமே உங்கள்
விரோதம் விரித்துரைக்க வேண்டா—குரோதத்தால்
தம்மிற் கடையாம் சனியும் இரேவதியும்
உம்மிற் கலந்துற்ற வோ?

என்று பழித்துப்பாடியுள்ளார். இச்செய்யுளால் அப்புலவர்மனம் இவரிடத்து எவ்வளவு ஈடுபட்டிருந்ததென அறியலாம்.

இவர், தமிழ்ச்சங்கத்துக்குப் பொருள்தேடுதலையும், ஏடுகள் தேடுதலையும் மேற்கொண்டுசெல்பவர் என்பது குறித்து, ஒரு புலவர்,

'சங்க நிதிவளர்க்குந் தாளாளன் வானில் உள்ள
சங்க நிதிகொணர்வான் சார்ந்தனனே—அங்கிருக்கும்
சிந்தாமணி கொணர்வான் சென்றனனோ ஒன்றுணரேன்
மைந்தார் புகழ்ப்பாண்டி மன்'

என்று பாடியுள்ளார்.

இந்நாட்டுப்புலவரேயன்றிப் பிறநாட்டுப் புலவரும் இவரைப் பாராட்டிப் பாடியுள்ளார்கள். அவருள் பிரான்ஸ்தேசத்துத் தலைநகரான பாரிஸ்நகரத்தில் தமிழ்ப்புலமையும் பெற்றிருந்த புரொபஸர் ஜூலியன் வின்ஸன் என்பவரும் ஒருவர். அவர்பாடல் வருமாறு:—

செந்தமிழ்நாட் டெல்லாருஞ் சேர்த்தேத்து மாமகனே
நந்தபுகழ் விட்டுத் தவறினையோ—அந்த
இருவினையும் வென்று கடந்திலையேல் இன்னும்
பெருநலஞ் செய்வாய் பிறந்து.

இதனாலும் இவர்பிரசித்தி நன்கு விளங்கும். இன்னும் இவர் பெருமையெல்லாம் விரிக்கிற் பெருகும்.

பத்திராசிரியர்.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை.*

திரு. S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L.,
திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப்பேராசிரியர், திருவனந்தபுரம்

பேராசிரியர் சுந்தரம்பிள்ளையைப்பற்றி அறியாத தமிழ்மக்கள் யாரும் இருக்கமாட்டார்கள். பிள்ளையவர்கள் எத்தனையோ கல்வித்துறைகளிற் பெரும்புலமைவாய்ந்தவர். 'தத்துவஞானம் விஞ்ஞானங்களின் பேரரசி' என்று ஓர் ஆங்கிலப்பழமொழி கூறும். அத்தகுதிவாய்ந்த தத்துவத்துறையின் பேராசிரியராக, திருவனந்தபுரம் மகாராஜா-கல்லூரியில் இவர் பல்லாண்டுகள் விளங்கியவர்; தென்னிந்தியசரித்திரத்தில் நிபுணர்; கல்வெட்டு ஆராய்ச்சியில் தலைசிறந்தவர்; நமது புராண இதிகாசங்களிலும் நன்குபயின்றவர்; வேதாந்தசாத்திரங்களை ஆழ்ந்து கற்றவர்; பத்தி சிரத்தையுடையவர்; இவற்றோடு இனிய மக்கட்பண்புமுடையவர். நாட்டுப்பற்றும் தாய்மொழிப்பற்றும் இவரைப் பெரிதும் ஆட்கொண்டன.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, இவர் ஒரு கவிஞரும் ஆவர். கவிஞர் என்ற நிலையிலேதான், அதிலும் நாடகக்கவிஞர் என்ற நிலையிலேதான் இவரைப்பற்றி இப்பொழுது பேசப்போகிறேன்.

சென்ற நூற்றாண்டின் இடைக்காலத்தில் நாடகநூல் சிலவே தமிழில் இருந்தன. அவற்றில் வழுக்கள் பலவாக இருந்தன. இவ்வழுக்கள் ஒழியும்படியாகவும், புதுச்சுவைகள் பலவும் நாடகங்களிற் பொருந்தும்படியாகவும், நாடகங்களை நன்மக்களும் நுகர்ந்து இன்புறும்படியாகவும் செய்தவராவர் நம் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை.

இவர் பிறந்தது 1855-ல்; அரிய மனோன்மணீய நாடகத்தை இயற்றி வெளியிட்டது 1891 மார்ச்சுமாதத்தில்; இவர் மறைந்தது 1897ல்.

நாடகமியற்றல் எளியதொருகாரியமன்று. அதனை இயற்றுதற்கு அரியமேதை, மிக்க உலகாநுபவம், தாய்மொழியில் ஆழ்ந்த உணர்ச்சி, பண்டைக்காலத்து இலக்கியங்களிலே சிறந்த பயிற்சி,

---

* இது திருவனந்தபுரம் வானொலிநிலையத்திலிருந்து 4—8—52ல் ஒலி பரப்பியது. திருத்தங்களுடன் அனுமதிபெற்று வெளியிடப்பட்டது.

அதனால் ஏற்படும் மனப்பண்பு முதலிய அனைத்தும் வேண்டும். இத்துறைகளிலெல்லாம் பெருந்தகுதிவாய்ந்தவர் நம் சுந்தரம்பிள்ளை. இவர் இப் புதுத்துறையிலே புத்தம்புதியமுறையில் நூலியற்ற வேண்டுமென்று துணிந்தது முற்றும் ஏற்புடையதே.

நாடகத்தில்வரும் கதையின் உட்பொருள் முற்படக் கவனித்தற்குரியது. இதனை ஆழ்ந்து ஆராய்ச்சிசெய்து தேர்ந்தெடுத்ததற்கு மில்டன் என்ற மகாகவியை எடுத்துக்காட்டுவது வழக்கம். கதை நிகழ்ச்சி மிகஆழ்ந்த ஓர் உண்மையை அடிநாதமாகக்கொண்டு அமைதல்வேண்டும். ஆனால் ஓரிடத்தும் அதுவலிந்துதோன்றுதல்கூடாது. இவ்வுட்பொருளின் ஓர் இயற்கைவிகாசமே கதையின் பொருளாக இருத்தல்வேண்டும். கதையினின்று இவ்வுட்பொருள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமேயல்லது, உட்பொருளிலிருந்து கதைப் பொருளை வடித்தெடுக்கலாகாது. நாடகம் (Drama) என்பதற்கும் தத்துவநாடகம் (Metaphysical drama) என்பதற்கும் உள்ள வேறுபாட்டை நாம் நன்றாகத் தெளிந்துகொள்ளுதல்வேண்டும். நாடகத்தின் கதை, சிறியதொரு வித்தினின்று அழகிய புஷ்பம் ஒன்று மலர்ந்து காட்சியளித்தல்போல உள்ளதாகும்.

சுந்தரம்பிள்ளையும் தாம் மனோன்மணீயம் இயற்றுங்காலத்துப் பல உட்பொருள்களைப்பற்றியும் சில ஆண்டுகளேனும் சிந்தித்திருத்தல்வேண்டும். மனிதரது சொற்செயலுக்கு அப்பாற்பட்டதாய், அவர்களுடைய நினைவிற்கும் எட்டாததாய் உள்ள பரம்பொருளின் நியதி உலகத்தோரை ஆட்டுகின்றது. இதுதான் சுந்தரம்பிள்ளை கருதிக்கொண்ட உட்பொருள். ஜீவகனை ஜீவாத்மாவாகவும், அவனை வசப்படுத்தி ஆட்டுவித்துவந்த குடிலனை மாயாசக்தியாகவும், மனோன்மணியை முத்திக்குரிய அறிவுதெளிந்த ஆன்மாவாகவும், புருஷோத்தமனை அருட்சக்தியாகவும் இங்ஙனமெல்லாம் ஆசிரியர் உருவகித்து எழுதியபோதிலும், இவற்றின் தெளிந்த உட்பொருள் முற்கூறியதேயாகும்.

அடுத்து நோக்கவேண்டுவது கதையின் அமைப்பு (Plot). இது தெளிவானதாய் எளிதாய் யாவருக்கும் சுவையை உண்டுபண்ணுவதாய், பாத்திரங்களின் இயல்புக்குத் தக்கதாய் இருத்தல்வேண்டும்.

மனோன்மணீயத்தின் கதை Lytron பிரபு எழுதிய 'The Secret Way' என்ற கவிதையைப் பின்பற்றியது. ஆனால் கதையை நமது நாட்டிற்குத் தகுந்தபடி மாற்றி, அழகுற அமைத்தவர் சுந்தரம் பிள்ளையேயாவர்.

மூன்றாவதாகக்கவனித்தற்குரியது கதைக்குரியபாத்திரங்கள் :- இவைகள் இயற்கையொடு பொருந்துவனவாய், அமானுஷ்யமான பாத்திரங்கள்வரும்பொழுது அவற்றின் இயல்போடும்பொருந்து வனவாய், சிருஷ்டிக்கப்படுதல்வேண்டும். இவ்வாறாகத்தோன்றும் பாத்திரங்கள் தம் தனியியல்புகளில் எவ்வகைக்குறைவுமில்லாமல், நாடகமாகப்பரிணமித்து ஒன்றோடொன்று கதைநிகழ்ச்சியில் ஊடா டும்பொழுது தம் தனியியல்புகளுக்கு ஒத்திருத்தலோடு, அவ்வியல்பு கள் சிறந்துவிளங்கும்படியாகவும் அமைதல்வேண்டும். குறைவு இல்லாமல் என்று கூறியது பாத்திரங்களாய்வரும் ஒவ்வொருவரும் எவ்வகைக்குறைபாடும் இல்லாமல், அனைவரும் மக்களிற் சிறந்தவர் களாயிருத்தல்வேண்டுமென்பது கருத்தல்ல. ஆசிரியர் என்ன இயல் புடையாராக அவர்கள் இருத்தல்வேண்டுமென்று கருதிக்கொண் டாரோ, அந்த இயல்புக்கு மாறான இயல்பும் சொல்லும் செயலும் காணப்படாமையே இங்குக் கருதியது. இம்முறையிலே நல்ல செவ்வியுடைய பாத்திரசிருஷ்டியிலேதான் கவித்துவத்தின் பெருமைமுழுதும் அமைந்துள்ளது என்பர்.

மேற்கூறிய அரிய இயல்புகளோடு அமைக்கப்பட்டதே நம் ஆசிரியர் இயற்றிய மனோன்மணீய நாடகம். இது நாடகநூலினை வாசித்தோர் அனைவருக்கும் வெளிப்படையாய் விளங்கும்.

இனி, நூலிலுள்ள சிறப்புக்கள் சிலவற்றை நோக்குவோம்.

முதலாவது நூலின் யாப்பு:—ஆசிரியர் அகவற்பாவால் தெளிந்த நடையில் தமது நூலை யியற்றியுள்ளார். இவர்தாமே ஏறக்குறைய வாசகநடைக்குச் சமமான அகவற்பாவால் தாம் நாடகத்தை இயற்றுவதாகக் கூறியுள்ளார். இந்தப் பாவும் நடையும் பலவகை யிற் பயன்பட்டு நூலின் அழகைப் பெரிதும் எடுத்துக்காட்டுகின் றன. சம்பாஷணையிலும் இவை பெரிதும் உதவுகின்றன. வேறு எவ்வகைப்பாவும் அகவலைப்போல் நாடகத்துக்கு உதவமாட்டாது.

இத்தகைய அகவலில் ஆண்டுள்ள சொற்கள் அதன் நடையை நெகிழ்த்துவதற்குப் பெரும்பாலும் அநுகூலமாயுள்ளன. அகவலை எளிதாகச் செய்யும்பொருட்டுப் பலவேறுஉபாயங்களையும் ஆசிரியர் இனிது கையாண்டுள்ளார். பல பழமொழிகளை இடையிடையே பெய்துசெல்லுதலாலும், அங்கங்கே நகைச்சுவைபொருந்த வாசகங்களை அமைத்துச்செல்வதாலும், புராணக்கதைகளைப் புராணம் முதலியவற்றில் அமைந்த சொற்களைக்கொண்டே சுருக்கியெழுதுதலாலும் நூல் எளிமையெய்தியுள்ளது. இந்நூலைக் கவிஞர்களும் தமிழறிவிற் சிறந்தவர்களும் மாத்திரம் கற்பது ஆசிரியரது நோக்கமன்று. தமிழ்வாசிக்கவல்ல அனைவரும் – சிறப்பாக மாணவரனைவரும் – கற்றுணர்வதே நோக்கமாகக்கொண்டிருந்தனர். சிற்சில இடங்களில், ஆங்கிலமொழிபெயர்ப்புக்களும் பிற்கூறிய நோக்கத்தை நிறைவேற்றுகின்றன.

நன்மையே யாவும் நன்மையாய்முடியின்

என்பது All is well that ends well என்றதன் மொழிபெயர்ப்பு. இம் மொழிபெயர்ப்பு எவ்வளவு அழகாயமைந்துள்ளதென்பதை நீங்களே உணர்ந்துகொள்ளலாம்.

அடுத்தது நூலின் நடையினிமை. இது தனிப்படப்போற்றத்தக்கது. உதாரணமாக,

தூவியால் தம்முடல் நீவிடிற் சிரிக்கும்
சிறுமியர் என்னஅச் செழுநில நங்கை
உழுபடைக் கொழுமுனை தொடுமுனங் கூசி
உடல்குழைந் தெங்கும் உலப்பறு செல்வப்
பயிர்மயிர் சிலிர்த்துப் பல்வளம் நகுவள்

என்ற அடிகளைக் காட்டலாம்.

மேற்குறித்த நூலியல்புகள் ஒருபுறமிருப்ப, அழகாகச்செதுக்கிப் பட்டம்செய்த மணிபோன்று விளங்கும் வரிகள் அங்கங்கே ஒளிர்ந்து மிளிர்கின்றன.

இச்சை யற்றவர் இச்சகத்து யாரே?
முடிதன் அடிவிழில் யாரெடுத் தணியார்?

என்பன உதாரணங்கள். ஒருசில இடங்களில் நமது சங்கச்செய்யுட்களின் அழகும் கௌரவமும் பிரதிபலிக்கின்றன.

அமுத மூற்றிருக்கும் குமுதவாய் விண்டு
மயவுரை பலவும் குயிலின் மிழற்றி
மலய மாருதம் வந்துவந் துந்த
நிலவொளி நீந்திநம் நெடுநகர் முற்றத்துப்
பந்துவந் தாடிமேல் மந்திரம் அடைந்தே
துணைபுணர் அன்னத் தூவி யணைமிசைக்
கண்படு மெல்லை

இவற்றில் 5-ம் அடிதவிர ஏனைபடிகள் சங்கச்செய்யுளின் அடிகளையொத்து அழகொடு சுவைமிகுந்து காணப்படுகின்றன.

இனி, பலவகை வருணனைகளும் இங்கே நோக்கத்தக்கன. முன்னோர் வகுத்த மரபினை அநுசரித்து இயற்றிய வருணனை ஒரு வகை. இதற்கு நாடு நகர வர்ணனைகள் உதாரணங்களாம். பிறி தொருவகை மக்களைப்பற்றியது. இதற்கு ஓர் உதாரணம் சுந்தர முனிவரைப்பற்றிய வருணனை (I, 2, 89-94). இது மிகச்சிறந்த தாகும். இரவில், மனோன்மணியைக் கனவுகாணும்போது அவளைப் புருஷோத்தமன் வருணிக்கும் பகுதி (II, 3) மற்றொரு சிறந்த உதாரணமாம்.

சம்பாஷணைகளை நிகழ்த்தும்முறை நாம் கவனிக்கவேண்டும் அதிமுக்கியவிஷயங்களில் ஒன்றாகும். சம்பாஷணையிலேதான் நாடகத்தின் உயிர்நாடி துடித்துக்கொண்டிருக்கும். இவ்வகைச் சம்பாஷணைகள் இந்நூலிலே பல இடங்களில் நிகழ்வதை நாம் தெரிந்து அநுபவிக்கலாம். இருவர் உரையாடிக்கொண்டிருக்கும் பொழுது, ஒருவரோடொருவர் நிகழ்த்தும் எதிர்மாற்றங்களின் விரைவும் பொருத்தமும் நம்மை வியப்பில் ஆழ்த்திவிடுகின்றன.

சொல்லாட்சி, வாசகநடை முதலியன இவ்வாறிருப்ப, இந் நூலிலே காணும் சிந்தனைச் சிறப்புக்கள் பலவாகத்தோன்றி நம்மை மகிழ்விக்கின்றன. முற்காலக் கருத்துக்களை அங்கங்கே எடுத் தாளுதல் முன்னே கூறத்தக்கது. இவைகள் மனோன்மணீயத் தில் நிரம்பக் காணப்படுகின்றன. ஒருசில கருத்துக்களைச் சுந்தரம் பிள்ளை அழகிலும் சுவையிலும் மிகும்படி பேசியுள்ளார். ஒரு திருக்குறளை வள்ளுவரும் மெச்சும்படியான அழகுச்சுவையோடு

"கெட்டார்க்கு உலகில் நட்டார் இல்லை" (4—4—188)

என எடுத்தாள்கிறார். இடையிடையே கற்பனைவிசேஷங்களும் நமக்கு இன்பத்தையூட்டுகின்றன. தற்காலத்து விஞ்ஞான சாஸ்திரங்களிலும் நமது பண்டைநூல்களிலும் காணப்படும் கருத்துக்கள் யாரும் வியக்கத்தக்கவண்ணம் அருமையாக ஆளப்பட்டுள்ளன.

இவ்வாறாக நூலின் அடிநாதமாகவுள்ள உண்மை, கதையின் அமைப்பு, கதாபாத்திரசிருஷ்டி, சொல்நடை முதலியவற்றின் அழகு, செய்யுளின் சிறப்பு, கருத்தின்வளம், பண்டைநூலாட்சி முதலிய பலவும் நம்மைப் பெரிதும் வசீகரிக்கின்றன. இடையே காணப்படும் சிவகாமிசரித்திரம் இவ்வழகிய நாடகமாகிய பருமணிப் பதக்கத்தின் நடுநாயகமணியென்றே சொல்லலாம். இச்சரித்திரமும் ஓர் ஆங்கிலச் சிறுநூலின் மொழிபெயர்ப்பே.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளையியற்றிய இந்நூல் சேரநாட்டில் பிறந்தது. இவ்வாறே தோன்றிய மற்றோர் இயலிசைநாடகநூல் சிலப்பதிகாரமாகும். இந்த இரண்டும் தமிழ்மக்களின் அழியாப் பெருஞ்செல்வங்களாம். இவற்றின் ஆசிரியர்களின் பெரும்புகழ் என்றும் குன்றாது பொலிந்து ஓங்குக!

> வேத சிகையும் விரிகலையும் மெய்யன்பர்
> போதமும் போய்த்தீண்டாப் பூரணமே—பேதமற
> வந்தெனைநீ கூடுங்கால் வாழ்த்துவர்யார் வாராக்கால்
> சிந்தனையான் செய்ம்முறையென் செப்பு.

என்றது இந்நூலின் அழகிய காப்புச்செய்யுள்.

இக்காப்புச்செய்யுளின்பின், தமிழ்த்தெய்வவணக்கமொன்று அருமையாகவும் அழகாகவும் சுந்தரம்பிள்ளை இயற்றியுள்ளார். கண்ணகியை வணங்குவித்த இளங்கோவடிகளைப்போலத் தமிழ் மொழியைத் தெய்வமாக்கி அத்தெய்வவணக்கத்தை முதன்மையாகத் தொடங்குவித்தவர் இப்பேராசிரியரேயாவர்.

இப்பெரியார்க்குத் தமிழ்மக்கள் அனைவருடைய வணக்கமும் உரித்தாகுக.

தமிழும் மலையாளமும்

எஸ். வையாபுரிப்பிள்ளை.
(திருவிதாங்கூர் ஸர்வகலாசாலைத் தமிழாராய்ச்சித்துறையில் பேராசிரியர்)

முன்னுரை

திருவிதாங்கூர்-கொச்சி ஐக்கியநாட்டிலே வழங்கிவரும் மொழிகளில் மிகமுக்கியமானவை மலையாளமும் தமிழுமாம். இவ்விரு மொழிகளுக்குமுரிய உண்மையான தொடர்புபற்றிப் பலஅறிஞர்கள் நெடுங்காலமாக ஆராய்ந்துள்ளார்கள். எனினும் இம்மொழித் தொடர்பு பற்றியமுடிவு ஐயத்திற்கிடமின்றி நன்கு துணியப்பெறாமலே இருக்கிறது. பலரும் பலவேறு முடிவுகளுக்கு வந்திருக்கிறார்கள். நடுநிலையினின்று இப்பொருளோடு தொடர்புள்ள எல்லா விஷயங்களையும் கவனித்து ஆராய்ச்சி செய்வது திராவிடமொழி ஆராய்ச்சியாளரது கடமையாம். இக்கடமையை மேற்கொண்டே இம்முயற்சி இங்குச் செய்யப்படுகிறது.

தமிழ்மொழிச் சரிதம்

தமிழ்மொழியின் சரிதத்தை நோக்கினால் அது மூன்று நிலைகளை அடைந்துள்ளதெனத் தெரிகிறது. அவை பண்டைத் தமிழ்நிலை, இடைக்காலத் தமிழ்நிலை, தற்காலத் தமிழ்நிலை என்பன. பண்டைத்தமிழைச் சங்க இலக்கியங்கள் கொண்டும், தொல்காப்பிய இலக்கணங்கொண்டும் அறியலாம். இடைக்காலத்தமிழைத் தேவாரம், திவ்யப்பிரபந்தம், சிந்தாமணி முதலிய இலக்கியங்கள் கொண்டும், வீரசோழியம், நன்னூல் முதலிய இலக்கணங்கள்கொண்டும் அறியலாம். தற்காலத் தமிழ் நன்னூலுக்குப் பிற்பட்ட இலக்கியங்கள் கொண்டும், பேச்சு வழக்குத் தமிழ்கொண்டும் அறியவேண்டியதாயுள்ளது. இம்மூன்று நிலைகளும் சொற்கள் பற்றியும் (vocabulary), சொல்வடிவம்பற்றியும் (word-forms), ஒலிமாற்றம்பற்றியும் (sound-changes), சொற்களின் அமைதிபற்றியும் (morphology), சொற்பொருள்பற்றியும் (semantics), மொழிநடைபற்றியும் (style), செய்யுள் அமைதிபற்றியும் (metre) தம்முள் பெரிதும் வேறுபடுகின்றன.

இம் மூன்றுநிலைகளில் எந்நிலையோடு பிராசீன மலையாளமொழி ஒத்துத் தொடர்புடையதாய் நிற்கிறது? உதாரணங்கள் மூலமாக இதனை ஆராய்தல்வேண்டும்.

பிற்காலச் சொற்கள்

முதலாவது சில சொற்களை நோக்குவோம். பிரான், சிரி, தங்கம் என்ற சொற்கள் பண்டைத்தமிழிற் கிடையா. முதலிரண்டு சொற்கள் இடைக்காலத் தமிழ்-இலக்கியங்களில் அருகித்தோன்றி அக்காலத்தின் இறுதியிலுள்ள இலக்கியங்களில் சற்று மிகுதியாய்க் காணப்படுகின்றன. "பிரான்" அப்பர் தேவாரத்திலும் (5: 20, 8) திருவாய்மொழியிலும் (1, 7, 6) வருகிறது. "குமிண்சிரிப்பும்" என அப்பரும் (4, 81, 4), "உன்னடியார் குனிப்பார் சிரிப்பார்" என்று மாணிக்கவாசகரும் (495) வழங்கியுள்ளார்கள். இச்சொற்கள் ராம சரிதம் (35-2) முதலிய பிராசீன மலையாள இலக்கியங்களில் காணப் படுகின்றன. "தங்கம்" மிகமிகப் பிற்பட்ட சொல். 16-ம் நூற் றூண்டில் தோன்றிய சூடாமணிநிகண்டிற்கூட இச்சொல் காணப் பெறவில்லை. "தங்கத்தானே" என்று பிள்ளைப்பெருமாளையங்கார் பாடுகின்றார். மலையாளத்தில் "நளசரிதம்" என்ற நூலில் இச் சொல் வருகிறது. பொதுப்படநோக்கினுல் மலையாளப் புராதன இலக்கியங்களில் காணும் சொற்களில் பெரும்பாலனவும் இடைக் கால, பிற்காலத்தமிழ்-இலக்கியங்களில் வந்துள்ளனவேயாம்.

சொல்-வடிவங்கள்

இனி, சில சொல்வடிவங்களை நோக்குவோம். "துணை" என்ற தமிழ்ச்சொல் அளவு, வரை என்று பொருள்படும். "பொன்றுந் துணையும் புகழ்" என்பது திருக்குறள் (156). இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் இந்த இடைச்சொல் "தனை" என வடிவுதிரிந்தது. "இத்தனையும் வேண்டும்" என்றனர் மாணிக்கவாசகர் (திருவெம் பாவை, 3.) இவ்வாறு திரிந்தவடிவமே ராமசரிதத்தில் (15-2) வருகின்றது. உடலம், இலலம் என்பனவும் இத்தகைய உதாரணங் களே. 'உடலம்' என்பது சரீரம என்று பொருள்படும். இச்சொல்

'உடல்' என்பதனோடு 'அம்' விகுதி சேர்ந்துவந்தது. 'உடல்' என்பதற்குத்தானும் சரீரம் என்ற பொருள் சங்ககால வழக்கிற் காணப்பெறவில்லை. எனவே 'உடலம்' பிற்பட்ட சொல்லாதல் தெளிவு. 'சலந்தரன் உடலந் தடிந்த' என்பது தேவாரம். இப் பிற்பட்ட வழக்குச்சொல்லே மலையாளத்தில் ராமசரிதத்தில் உள் ளது. இல்லம் என்ற சொல் இப்போது மலையாளத்தில் பரக்க வழங்குகிறது. ஆனால் தமிழில் இது பிற்கால வழக்கு. சங்க காலத்தில் 'இல்' எனவே உள்ளது. 'இல்லடு கள்ளின்' என்பது புறநானூறு (329). இல்லம் என்ற சொல்லை அப்பர் வழங்குகிறார். 'இல்லமே தாம் புகுதா இடுமின் பிச்சை என்றார்க்கு' (6, 9, 9,) என்பது அவர் திருவாக்கு. 'இல்லம் சிறியாரைக் கொண்டு புக லும்' எனத் திரிகடுகத்திலும் (4), 'இங்கு நம் இல்லங்கள்தோறும் எழுந்தருளி' எனத் திருவாசகத்திலும் (திருவெம்பாவை, 17) வந் துள்ளமை காணலாம். இவற்றால் 'இல்லம்' என்பது சுமார் 7-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தமிழ்வழக்கிற்புகுந்ததெனல் தெளிவாம். இப்பிற்பட்ட சொல்வழக்கே மலையாளத்திற் காணப் படுவது. இங்ஙனமாக, இடைக்காலத்து இறுதியில் தோன்றிய தமிழ்ச்சொல்வடிவங்கள் பிராசீனமலையாள இலக்கியத்தில் காணப் படுகின்றன.

ஒலி-மாற்றம்

மொழிகளில் அதிபுராதனமாகிய சொற்கள் ஸர்வநாமங்கள் என்றுசொல்லப்படுகிற மூவிடப்பெயர்களும், ஒன்று முதலிய எண் ணுப் பெயர்களும் ஆம். மூவிடப்பெயர்களில் "யான்" என்பது தன்மையொருமைக்குரிய பண்டைத்தமிழ். நான் என்பது இடைக் காலத்தே தோன்றி நாளடைவில் வழக்கில்மிகுந்து இன்றைச் சொல்லாகிவிட்டது. இப்படித்திரிந்த தன்மைப்பெயரே மலையாளத் தில் ராமசரிதத்தில் "ஞான்" என வருகிறது. நான் என்பது ஒலி மாற்றத்தால் திரிந்து ஞான் என வருதல் இங்கு அறியத்தக்கது. நாறு-ஞாறு, நாலுதல் - ஞாலுதல் முதலிய சொற்களை நோக்குக.

எண்ணுக்குரிய பெயர்களில் ஒன்று என்பது ஒந்து என மலையாளத்தில் வரும். இது இடைக்காலத்திறுதியில் பேச்சுவழக்குத்தமிழிலிருந்து தோன்றிய வடிவமாகும். இதுபோன்று பல சொற்கள் உள்ளன. "மூந்து" "கந்றுகாலி" முதலியவற்றைக் காண்க. இவையாவும் தமிழ்ச்சொற்கள் ஒலிமாறி விளைந்த மலையாளச் சொற்களே.

சொல்-அமைதி : இடைநிலை

மேற்குறித்தவை சொற்கள்பற்றியன. சொற்களின் அமைதியை இனி நோக்குவோம். இவ் அமைதியால் மொழிகளின் சம்பந்தமும் கால முற்-பிற்பாடும் நன்கு தெளிவாகும். எனவே இந்த அமைதியை மொழிநூல் அறிஞர் மிகவும் போற்றுவர். ஒரு வினைச்சொல்லை எடுத்துக்கொள்வோம். "அறிவிக்கின்றேன்" என்ற சொல்லில் "அறி" என்ற வினையடியோடு "வி" என்ற பிற வினைவிகுதியும், கின்று என்ற நிகழ்கால இடைநிலையும், "என்" என்னும் தன்மையொருமைவிகுதியும் உள்ளன. இதில் "கின்று" என்னும் இடைநிலை தொல்காப்பியத்திற் கூறப்படவில்லை. சங்க இலக்கியங்களிலும் காணப்படவில்லை. இடைக்காலத்திறுதியிலுள்ள இலக்கியங்களிலும் 13-ஆம் நூற்றாண்டில் தோன்றிய நன்னூலிலும் காணப்பட்டுள்ளது. மலையாளத்தில் இவ்வினைச்சொல் "அறியிக்கிந்நேன்" என வந்துள்ளது. ஒன்று-ஒந்து என வருதல் போல "கின்றேன் என்பது கிந்நேன்" என வந்தமையும் வெளிப்படை. இதனால் இடைக்காலத்து இறுதியிலுள்ள தமிழ் வினைமுற்றின் அமைதியே பிராசின மலையாளத்தில் காணப்படுகிறது.

வேற்றுமை விகுதிகள்

இனி, பெயர்ச்சொற்கள் உருபுபெற்று வரும் சொல்லமைதியை நோக்குவோம். தொல்காப்பியத்தில் "அது" என்பது 6-ஆம் வேற்றுமை யுருபாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவன்றி "உடை" அல்லது உடைய என்னுஞ்சொற்கள் 6-ஆம் வேற்றுமையின் உருபாகவோ சொல்லுருபாகவோ வழங்கியதில்லை. இடைக்காலத்து

இறுதியில் இவ்வுருபுகள் தோன்றத்தொடங்கின. 'செருப்புடை படியர்' (அகம். 129) என்பனபோன்ற பிரயோகங்கள் சங்ககாலத்து உளவே யெனின், ஈண்டெல்லாம் இரண்டாம்வேற்றுமையுருபு விரிந்து அதற்குரிய உடைமைப்பொருளில் வந்த உடைச்சொல்லாகும். மேற்காட்டியதற்குச் 'செருப்பினை யுடைய அடியினர்' என்பது பொருளாம். இதன்கணுள்ள 'உடை' ஆறும்வேற்றுமை யுருபு அன்று' தம்முடைய தண்ணளியும்' எனப் பிற்பட்ட சிலப்பதிகாரத்தில் (கானல் வரி, 32) வருகின்றது. கம்பர் "நம்முடைச் சிலைகள்போல் நலியலாமோ" என்றனர் (யுத்த. மந்திர. 80). ஈரிடத்தும் 'உடைய' 'உடை' என்பன 6-ஆம் வேற்றுமைப்பொருளில் வந்துள்ளமை தெளிவு. மலையாளமொழியை நோக்கும்போது, அதில் 6-ஆம் வேற்றுமையுருபாக "உடெ" என்பது பிராசின இலக்கியங்களில் காணப்படுகிறது. ராமசரிதத்தில்வரும் "மைதிலி தன்னுடெ" என்பது இதற்கு உதாரணம். இது வேண்டுமிடங்களில் இன்சாரியைபெற்று "ன்றெ" என மருவியும் வழங்கலாயிற்று. தமிழிலும் இவ்வுருபு இன்சாரியைபெற்று வருதல் மிகப்பிற்பட்ட வழக்கு. 'குதிரையினுடைய' என்பது உதாரணம். சாரியையின் அம்சமாகிய னகரவொற்றும் 'உடை' என்றதன் அம்சமாகிய 'டெ' யும் சேர 'ன்றெ' என மலையாளத்தில் எழுதப்படுகிறது. இதனால் இடைக்காலத்து இறுதியில் தமிழில் வழங்கிய 6-ஆம் வேற்றுமை யுருபே பிராசினமலையாளத்தில் திரிந்துவந்தமை தெளிவாகும்.

சொற்பொருள்

இனி, சொற்பொருளை நோக்குவோம். "எவன்" என்ற சொல் பண்டைத்தமிழில் "ஏன்" "என்ன" 'யாது' என்ற பொருள்களிலே தான் வரும். 'சொல்வது எவன்' என்பது சொல்வது ஏன் என்று பொருள்படும். தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் இப்பொருள்களே காணப்படுவன. இடைக்காலத்து இறுதியில் இப்பொருள்களோடு யாவன், யார் என்ற உயர்திணைப்பொருளும் காணப்படுகின்றது. "உயர்வற வுயர்நலம் உடையவன் எவன்

அவன்" என்பது திருவாய்மொழி. மலையாளமொழியில் அதன் பண்டைநிலை முதற்கொண்டு யார் என்ற பொருளில்மட்டுமே இச்சொல் வழங்கிவருவதாகும். 'எவன் ஒருத்தன்" என வியவகார மாலையில் வருகிறது. எனவே இடைக்காலத்திறுதியில் தமிழில் தோன்றிய பொருளிலேதான் மலையாளமொழியில் இச்சொல் வழங்குகிறது.

மொழிநடை

இனி மொழிநடையை எடுத்துக்கொள்வோம். பண்டைக் காலத்துத் தமிழ்நடை உருபு முதலியனஇன்றி மிகச்செறிவுற்றுச் செல்கிறது. இடைக்காலத்து நடை உருபுகள் முதலியன அங்கங்கே விரிந்து சிறிதளவு நெகிழ்ந்துசெல்வதாகும். இதன் இறுதிக் காலத்தில் நெகிழ்ச்சி இன்னும் அதிகப்பட்டு வாக்கியங்களும் பூரணமாய் அமைந்து, பேச்சுவழக்கைப் பெரும்பாலும் ஒட்டிச் செல்கிறது. உதாரணமாக,

> வாசவன் மலரின் மேலான் மழுவலான் மைந்தன் மற்றக்
> கேசவன் சிறுவ ரென்ற தன்மையோர் தம்மைக் கேளாய்
> பூசலின் எதிர்ந்தே னென்றாய் போர்க்களம் புக்க போதென்
> ஆசையின் கனியைக் கண்ணிற் கண்டிலை போலும் அஞ்சி.

என்னும் கம்பன் செய்யுளைக் கூறலாம்.

இதனோடு

> *அரசர்கள் கோனே மேன்மேல் அருந்துயர் விடுத்தி வண்ணம்
> புரிகுழ லாளெ நண்ணிப் போக்கு மதல்ல காலர்;
> இருபது கரங்கள் தங்கும் இலங்க வேந்தனெ யொரிக்கால்
> கருதுக, களக சோகம், கைக்கொள்க கோப மிப்போழ்.

என ராமசரிதத்தில் வரும் பாட்டை ஒப்பிடலாம். இங்ஙனமே,

[*ஈவண்ணம் - இவ்வண்ணம். புரிகுழலாளெ - புரிகுழலாளை. இலங்க-இலங்கை. வேந்தனெ - வேந்தனை. ஒரிக்கால் - ஒருக்கால். களக-களைக. இப்போழ் - இப்பொழுது. எனிக்கு - எனக்கு. ஞான் - நான். என்னெ-என்னை.]

> எனக்கு நீ செய்யத் தக்க கடனெலாம் ஏங்கி யேங்கி
> உனக்குநான் செய்வ தானேன் என்னினியா ருலகத் துள்ளார்.

என்ற கம்பன் செய்யுளையும் (இராவணன் சோகப். 39)

> எனிக்குநீ சடங்கி ஞலே இயற்றுமொண் கரும மெல்லாம்
> நினக்கு ஞான் செய்யுமாறு நிறுத்திவைத் தயிரோ டென்னெ.

என்ற ராமசரித விருத்தத்தையும் (73, 10) ஒப்புநோக்கலாம்.

மொழிநடை ஈரிடத்தும் பெரிதும் ஒத்திருக்கின்றது. எனவே இடைக்காலத்தின் இறுதியிலுள்ள எளிய தமிழ்நடையைச் சார்ந்து தோன்றியதே பிராசீன மலையாளப்பாட்டுக்களின் நடையென்பது விளங்கும்.

செய்யுள் அமைதி

செய்யுளின் இலக்கண அமைதியை இனி நோக்குவோம். "லீலா திலக"த்தில் தமிழ்எழுத்துக்களால் அமைந்து எதுகை மோனையுடையதாய்வரும் விருத்தவகையே "பாட்டு" எனப் பாட்டினது இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. மலையாளத்திலுள்ள அதிபிராசீன நூலாகிய ராமசரிதம் "பாட்டு" என்ற முறையில் அமைந்ததாம். தமிழில் இவ்விலக்கணத்திற்கேற்ப வரும் விருத்தப் பாக்கள் இடைக்காலத்தில் தோன்றத்தொடங்கி அதன் பிற்பகுதியிலும் பிற்காலத்திலும் மிகவும் பிரசாரம் எய்தியுள்ளன. எனவே ராமசரிதப் பாட்டுக்கள் பிற்காலத் தமிழ்—இலக்கியத்தை யொட்டியமைந்தன என்று தடையின்றிக் கூறலாம்.

மேற்காட்டிய ராமசரிதப்பாட்டில், ஈவண்ணம், புரிகுழலாளெ, ஒரிக்கால், களக, இப்போழ் முதலிய மலையாளச்சொற்கள் தமிழினது திரிந்த வடிவங்களே. மற்றச்சொற்கள் தமிழ்வடிவத்திலேயே உள்ளன. ஆகவே ராமசரிதகாலமாகிய 14-ம் நூற்றுண்டாவில் தான் தமிழிலிருந்து வேறுபட்டு மலையாளம் ஒருதனிமொழியாகப் பரிணமித்திருக்கவேண்டுமென்று கருதலாம்.

சாசனச்சான்று

இவ்வினம் வேறுபடத்தொடங்கியகாலத்தைச் சாசனங்களால் ஒருவாறு வரையறுத்தல்கூடும். மலையாளநாட்டில் இப்போதுள்ள சாசனங்களில் ஐயமின்றி மிகப் பழமையானது கொச்சிராச்சியத்தில் தளியல் என்ற இடத்திற் காணும் சிவன்கோயிற் சாசனமாகும். இது கி. பி. 930-ஆம் ஆண்டளவில் தமிழில் எழுதப்பட்டுள்ளது. வேறொரு பழையசாசனம் கவியூரில் உள்ளது. அதில் ஒரு பகுதி வருமாறு:—

> கலியுகத்தொடங்கி நாலாயிரத்து அம்பத்தோராமாண்டு திருக்
> கவியூர்ப் பட்டாரர்க்கு மகிழஞ்சேரித் தேவன் சேந்நன்
> திருவிளக்கும் திருவமுதும் திருவக்கமும் திருச் சந்நணமும்
> திருப்புகையும் அமைச்சான்.

இதன் காலம் கி. பி. 950. இதில் பேச்சுவழக்குத் தமிழும் சேந்நன் முதலிய தமிழொலி மாறிய மலையாளவடிவங்களும் காணப்படுகின்றன.

இச்சாசனங்களால் கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து தமிழ்திரிந்து மலையாளமொழியாய் அமையத் தொடங்கிற்று என ஐயமின்றித் துணியலாம். இக்காலத்திற்குமுன்பு ஒலிமாற்ற முதலியன நேர்ந்தமைக்கு யாதொரு சான்றுமில்லை. நேர்மாறாக, இதற்குமுன்புள்ள சேரநாட்டுக் கவிஞர்கள் அனைவரும் நல்ல தமிழிலேயே பாடியிருக்கின்றனர். குலசேகராழ்வார், சேரமான் பெருமாள் நாயனர், சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் முதலியோரை உதாரணமாகக் காட்டலாம். சங்ககாலத்திற்குச் செல்வோமானல் "பதிற்றுப்பத்து" என்ற தொகைநூலைக் காண்கின்றோம். இது சேர அரசர்களைப்பற்றியது. சங்கச்செய்யுட்களில் வந்துள்ள ஒருசில சொற்கள் இன்றும் மலையாளநாட்டில் வழங்கி வருகின்றன.

தமிழ்மொழிக்குரிய வட்டெழுத்துக்களே மலையாளநாட்டில் பூர்வகாலத்தில் கையாளப்பட்டுவந்தன. அங்குள்ள புராதன

சாசனங்கள் தமிழ்மொழியிலேயே அமைந்துள்ளன. இவை தமிழ் மொழியே பண்டைக்காலத்தில் இந்நாட்டில் வழக்கிலிருந்ததென் பதைப் புலப்படுத்தும். பிராசீன மலையாளக்கவிஞர்கள் தமது மொழியைத் தமிழ் என்ற பெயராலேயே அழைக்கின்றனர். ராமப் பணிக்கர் தமது பிரம்மாண்ட புராண மொழிபெயர்ப்பைக்குறித்து 'இதா ஞான் தமிழாய்க்கொண்டறியிக்கின்றேன்' என்று கூறியுள்ளார்.

மலையாளத்திற்குத் தமிழே தாய்

ஆகவே சொற்கள், சொல்வடிவம், ஒலிமாற்றம், சொற்களின் அமைப்பு, சொற்பொருள், மொழியின்நடை, செய்யுள்-அமைதி, சாசன இலக்கியம், மலையாளநாட்டினர் இயற்றிய பூர்வ-இலக்கியங் கள், எழுத்துவரலாறு, மலையாளக் கவிஞர்களின் கருத்து முதலிய பலநெறிகளால் நோக்கினும் இடைக்காலத்திறுதியிலுள்ள தமிழி லிருந்து கி. பி. 10-ஆம் நூற்றாண்டளவிலே பிராசீன மலையாள மொழி தோன்றத்தொடங்கியதென்று ஐயமின்றிக்கூறலாம். இதனால் தமிழும் மலையாளமும் தாயும் மகளும் என்ற தொடர் புடையன என்பது தெளிவாக விளங்கும். மலையாளம் தமிழைப் போல் மூலத்திராவிடமொழியிலிருந்து நேரடியாய்ப் பிறந்ததென் றும், இரண்டும் சகோதரித் தொடர்புடையனவென்றும், மலையா ளம் தோன்றி 2000ஆண்டுகளுக்குமேல் ஆய்விட்டன என்றும் சிலர் கூறுவதெல்லாம் அபிமானம் பற்றிய கூற்றென்று தள்ள வேண்டுமேயன்றி நேர்மையான ஆராய்ச்சியின் முடிவெனக் கொள்ளுதற்கில்லை.

மேற்கூறியவாறு தோன்றிய மலையாள மொழியின் தொடக்க நிலையில் உருத்திரியாத தமிழ்ச்சொற்கள் பலவும் உருத்திரிந்தன சிலவும் வழங்கிவந்தன. இவ்வுருத்திரிபும் பெரும்பாலும் நாட்டின் இயற்கையமைதிக்கேற்ப மெல்லோசை தருதற்பொருட்டே நிகழ்ந் தது. பின்னர் மலையாளமொழி, தெலுங்கு, கன்னடம் முதலிய வற்றைப்போல, வடமொழியோடு நெருங்கிய உறவுகொள்ளத் தொடங்கிற்று. வடமொழிச்சொற்கள் மிகுதியாக மலையாளத்தில்

புகுந்தன. மிருது, கோஷம் முதலிய வடமொழியொலிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தொடர்பினால் மலையாளம் தனதுபூர்வநிலையிலிருந்து பெரிதும் வேறுபாடு அடைந்தது. ஆயினும் அதற்குத் தமிழ்மொழியின் தொடர்பை முற்றிலும் அறுத்துக்கொள்ளமுடியவில்லை. இன்றும் மலையாளமொழி தமிழர்க்கும், தமிழ்மொழி மலையாளிகட்கும் எளிதில் அறிந்துகொள்ளக்கூடியனவாகவே உள்ளன. தெலுங்கு, கன்னடமொழிகளுக்கு இல்லாத இவ்வியல்பு இவ் இருமொழிகளுக்குமுள்ள நெருங்கியதொடர்பை நன்குவிளக்குகின்றது.

முந்திய எனது ரேடியோப்பேச்சிலே இடைக்காலத்தின் இறுதியில் சுமார் 10-ஆம் நூற்றாண்டில், அக்காலத்தில் கேரளத்தில் வழங்கிய தமிழ்மொழி திரிந்து மலையாளமாகப் பரிணமிக்கத் தொடங்கியதென்று கூறினேன். இதுபற்றி முன் காட்டிய பலகாரணங்கள் தவிர, வேறுசில காரணங்களைக்குறித்து இன்று பேசலாமென்று நினைக்கிறேன்.

சொல் வரலாறு

பண்டை மலையாளச்சொற்கள் சிலவற்றிற்கு மலையாள வியாகரண முறையில் சொல்-வரலாறு காணுதல் இயலாது. அவற்றின் பூர்வரூபங்களாகிய தமிழ்ச்சொற்களை நோக்கினால்தான் அவ்வரலாற்றை உணரலாம். உதாரணமாக, வாதல் என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். இதற்கு மலையாளத்தில் வரலாறு யாதும் இல்லை. இதற்குரிய தமிழ்வடிவம் 'வாசல்' என்பது. சம்மதம் தம்மதம், சங்கடம் தங்கடம் என வருதல்போல, வாசல் என்பது வாதல் எனத்திரிந்தது. வாசல் என்ற தமிழ்ச்சொற்கும் இவ்வடிவில் வரலாறு கூறமுடியாது. 11-ஆம் நூற்றாண்டளவில் தோன்றிய செய்யுட்களில்தான் இச்சொல் காணப்படுகிறது. வானோ ரபயன் இரவி குலோத்துங்கன் வாசல் வந்தால் (பெருந்தொகை, 1489) என்பது காண்க. இதனால் இவ்வடிவம் இடைக்காலத்து இறுதியில் சாமானிய வழக்கில் புகுந்த தமிழ் என்பது

தெளிவு. இதன் பூர்வரூபம் 'வாயில்' என்பது. 'அடையா வாயில்' எனச் சிறுபாணாற்றுப்படையில் வருகிறது. இதற்குரிய பொருள் 'முகப்பிடம்' அல்லது 'வீட்டின்முகப்பு' என எளிதில் விளங்கும். இதுவே இச்சொல்லின் பிறப்பு வரலாறு. சிலவு, செறுக்கன் முதலியவையும் வேறு உதாரணங்களாம். செலவு, சிறுக்கன் என்பனவே இங்ஙனம் திரிந்தன. 'தாங்குகோடிதனஞ்செலவென்பவே' என்ற சிவரகசியமும், 'ஆலினிலைவளர்ந்த சிறுக்கன்' என்ற பெரியாழ்வார் 1, 4, 7 திருமொழியும் அறியத்தக்கன. இவ்வுதாரணங்களால் மலையாளச்சொற்கள் பலவற்றின் பூர்வவடிவம் தமிழில் உள்ளதென்பதும், அவ்வடிவம் திரிந்துதிரிந்து மலையாளவடிவங்கொண்டதென்பதும், இங்ஙனம் வடிவம் மாறியது சுமார் 10-ஆம் நூற்றாண்டிலே என்பதும் நன்கு புலப்படுகின்றன.

இந்நெறிக்குமாறாக தமிழ்ச்சொல் மலையாளமொழியினின்று திரிந்துவந்ததாகவேனும் அதன் பிறப்பு வரலாறு மலையாளத்தில் உள்ளதாகவேனும் காண இயலவில்லை. இதனால் மலையாளமொழி தமிழ்மொழிக்கு மிகவும் பிற்பட்ட காலத்தில் தோன்றியதென்பது வெளிப்படை.

மரபுத் தொடர்கள்

தமிழிலே இடைக்காலத்து இறுதியில் தோன்றிய சில மரபுத் தொடர்கள் பண்டை மலையாள இலக்கியங்களில் காணப்படுகின்றன. உதாரணமாக, திருவுள்ளம் எனக் கம்பன் வழங்குகிறான் (கங்கை. 67); இது ராமசரிதத்திலும் (2, 3) வருகிறது. திருமேனி (திருவாய்மொழி 9, 7, 3), திருவடி (நான்முகன் திருவந்தாதி, 68) முதலியனவும் பிறஉதாரணங்கள். இதனால் தமிழ் தோன்றி வளர்ந்து இடைக்காலநிலைமை அடைந்ததன்பிற்பாடு, அதினின்றும் பிராசீனமலையாளத்திலுள்ள மரபுத்தொடர்கள் கொள்ளப்பட்டமை நன்றாக வெளிப்படுகின்றது.

சந்தியமைப்புக்கள்

தமிழில் பிற்காலத்துத் தோன்றிய சில சந்தியமைப்புக்கள் பண்டை மலையாளத்தில் உள்ளன. உதாரணமாக 'வெவ்வேறு'

என்றதனைக் கூறலாம். வேறு வேறு என்ற இரண்டு சொற்கள் ஒன்றுபட்டுச் சந்தி மருவிவந்தது. முற்காலத்துத் தமிழில் இவ் வழக்குக் காணப்படவில்லை. 'பிறப்பினுக்கம் வேறுவேறியல' என்றனர் தொல்காப்பியர் (பிறப். 1). ஆனால் 'வித்தகமும் விதிவசமும் வெவ்வேறே புறக்கிடப்ப' எனக் கம்பன் பாடுகின்றான். எனவே இடைக்காலத்தின் இறுதியில் புகுந்த இப்பிரயோகமே மலையாள மொழியில் இடம்பெறலாயிற்று. இக்காரணமும் முன்புகூறிய முடிவை வலியுறுத்துகிறது.

இவ்வாறாக, எந்த நெறியில் நோக்கினும் தமிழின் உட்கிளையே மலையாளம் என்பது தெளிவாகிறது. உட்கிளையாகப் பிரிந்த காலமும் 10-ஆம் நூற்றாண்டின் அளவிலாகும்.

சரித்திரச் சான்று

இனி, சரித்திர நெறியால் நோக்குவோம். பூர்வகாலத்தில் வடக்கே வேங்கடமலையும், தெற்கே குமரிமுனையும், மற்ற இரண்டு புறத்தும் கடலும் எல்லையாகவுடைய நிலப்பரப்பிலே வாழ்ந்தவர்கள் தமிழ்மக்களே. அவர்கள் பேசிவந்த மொழி தமிழே. இவை தக்க சான்றுகளால் அறியப்படுகின்றன. தொல்காப்பியப் பாயிரத்தில்,

> வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத்
> தமிழ்கூறும் நல்லுலகத்து

என வருகிறது. இதனையே சிறிது விளக்கி

> வடக்கும் தெற்கும் குணக்கும் குடக்கும்
> வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்று
> அந்நான் கெல்லை யகவயிற் கிடந்த

என வேறோராசிரியரும் கூறுகிறார். ஆகவே தமிழ் ஒன்றே பண்டைக்காலத்தில் வேங்கடமலைக்குத் தெற்கேயுள்ள தென்னாட்டில் வழங்கிவந்ததாம். இப்பகுதியில் அரசாட்சிபுரிந்தவர்கள் சேர சோழ பாண்டியர் என்ற மூன்று பேரரசர்களுமாவர். இவர்களை

தண்டமிழ்க் கிழவர்
முரசுகெழுதானை மூவர்

எனப் புறநானூறும் (35),

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்

எனத் தொல்காப்பியமும் (செய்யுளியல் 79) கூறுகின்றன. சேருட்பட இம் மூவரும் தமிழர்கள் என்பதில் ஒருவர்க்கும் சந்தேகமேயில்லை. 'தண்தமிழ்க்கிழவர்' என்று இவர்களைப் புறநானூறு குறித்துள்ளது இதனைத் தெளிவாக்குகிறது. அன்றியும், புறநானூற்றில் வரும் பல செய்யுட்கள் சேரரைத் தமிழரசராகவே கொண்டு பாடியுள்ளன. பதிற்றுப்பத்து என்ற தமிழ்நூல் முழுவதும் உதியன்சேரல் முதலிய சேர அரசர்களைப் பற்றியதே. ஐங்குறுநூறு என்ற தொகைநூலை ஒரு சேர அரசர் தொகுப்பித்தனர். தொல்காப்பியரோடு உடன் கற்ற ஆசிரியர் ஒருவர் விளவங்கோட்டுத் தாலுக்கிலுள்ள அதங்கோடு என்னும் ஊரினர். இதனால் இவருக்கு 'அதங்கோட்டாசான்' என்று பெயர் வழங்கியது. தொல்காப்பியரும் சேரநாட்டினர் என்று கருதுவதற்கு இடமுண்டு. சேரநாட்டு அரசர்கள் பலர் தமிழ்க்கவிஞர்களாயும் உள்ளனர். உதாரணமாக, குலசேகராழ்வார், சேரமான் பெருமாள், இளங்கோவடிகள் முதலியோரைக் கூறலாம். சிலப்பதிகாரத்தின் கதாநாயகனாகிய சேரன்செங்குட்டுவன்

'அருந்தமிழாற்றல் அறிந்திலர் ஆங்கென' (26-161, 185; 27-5) என்று ஆரியமன்னரைக் குறித்துச் சொல்லித் தமிழரசர்களது தமிழப்பிரதிநிதியாக வடக்கேசென்று போர்புரிந்து வென்றான். இங்ஙனம் கதை அமைத்துள்ளார் சிலப்பதிகாரம் செய்த சேர குலத்து இளங்கோவடிகள்.

பெயர்கள்

சேரநாட்டிலுள்ள பண்டை நகரங்கள் பலவும் தமிழ்ப்பெயர்களையே தாங்கின. உதாரணமாக, கருவூர், தொண்டி, மாந்தை,

வெளியம், கழுமலம், தகடூர் முதலியவற்றைக் காணலாம். இங்ஙன மே நதிகளும், மலைகளும்; உதாரணங்கள் பொருநை, பெரியாறு, கொல்லிமலை முதலியன. மக்கட்குரிய இயற்பெயர் முதலியனவும் இத்தன்மையனவே.

ஆய் என்ற பெரும்புகழ்படைத்த அரசனொருவன் சேரநாட்டில் ஆட்சிபுரிந்து பெரிய வள்ளலாய் விளங்கினன். இவன் ஆண்ட சேரநாட்டை ஆய்நாடு என முற்காலத்துக் கிரேக்கர்கள் வழங்கினர்.

இங்கே காட்டிய சான்றுகளுக்கு எதிராக வேற்றுமொழி இச் சேரநாட்டில் முற்காலத்தே வழங்கியதாக ஒரு சான்றுமில்லை. இது நன்றாக மனங்கொள்ளுதற்குரியது.

கொடுந்தமிழ்

வேங்கட முதற் குமரிவரையுள்ள பெரிய நிலப்பரப்பில் வழங்கிய தமிழ் எங்கும் ஒரே தன்மையதாய் இருந்ததெனல் பொருத்தமாகாது. அங்கங்கே சிற்சில வேறுபாடுகள் இருத்தல் முற்றிலும் இயல்பே. இவ் வேறுபாடுகளைக் குறித்தனவே கொடுந்தமிழ்நாடுகள் என்பன. கொடுந்தமிழ்நாடுகளைப் பன்னிரண்டு என முற்காலத்தார் கணக்கிட்டனர்.

'செந்தமிழ்சேர்ந்த பன்னிருநிலத்தினும்' என்றார் தொல்காப்பியர். இவை இன்னவென்பதை

தென்பாண்டி குட்டம் குடங்கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன்வடக்கு—நன்றாய
சீதம் மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்.

என்ற பழஞ்செய்யுள் விளக்குகிறது. இவற்றுள் குட்டநாடு, குடநாடு, வேணாடு, பூழிநாடு என்பன சேரநாட்டுப் பகுதிகளென ஐயமின்றிக் கூறலாம். தாயைத் தள்ளையென்றும், தந்தையை அச்சன் என்றும் குட்டநாட்டினரும் குடநாட்டினரும் கூறுவரெனச்

சொல்லப்படுகிறது (நன்னூல், 272 மயிலை). இவ்வழக்காறு இன்றும் சேரநாட்டில் உள்ளதென்பது நாம் நன்கு அறிந்ததே. இச்சிறு வேறுபாடுகள் இருந்தபோதிலும், இவையனைத்தும் தமிழ் நாட்டுப் பகுதிகளேயென்பதில் ஐயமில்லை. இங்கே வழங்கிய மொழியும் தமிழேயாகும்.

அநாதித் தொடர்பு

சேரநாடு வெகுகாலமாகச் சோழபாண்டியரது ஆட்சியில் அடங்கியிருந்தமை சரித்திரச்சான்றுகளாலும், கல்வெட்டுக்களாலும் எளிதில் அறியலாம். இந்த ஆக்கிரமணம் எப்போது தொடங்கியது என்று வரையறை செய்யமுடியாது. சங்ககாலத்தில், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சேரனுள்பட எழுவரை வென்ற செய்தி கூறப்படுகிறது (அகம். 36). இவ்வரசனே யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை என்ற சேரனைவென்று சிறையில் அடைத்துவைத்தான் என்பதும் தெரியவருகிறது (புறம். 7). சோழர்கள் வெண்ணி, கழுமலம், கருவூர் முதலிய இடங்களில் நிகழ்ந்த போர்களில் சேரர்களை வெற்றிகொண்ட செய்தி சங்கப் பாடல்களால் விளங்குகிறது. ஆகவே சேரர்க்கும்சோழபாண்டியர்க்கும் போர்வினைகள் சங்ககாலந் தொட்டே நிகழ்ந்து வந்திருக்கின்றன என்று தோன்றுகிறது. சேரர்குடும்பத்திற்கும் ஏனைய சோழ பாண்டியகுடும்பங்களுக்கும் மணவினைகள் நிகழ்ந்தசெய்தியும் சங்க காலந்தொட்டு அறியப்படுகின்றது. இதுபற்றிப் பதிற்றுப்பத்தில் பல குறிப்புக்கள் காணலாம். இவ்வாறு பல நூற்றாண்டுகளாக, சேரர்களும் ஏனைத்தமிழரசர்களும் ஒருவர்க்கொருவர் கொண்டும் கொடுத்தும் அடுத்தும் ஊடாடிய செய்திகள் நிகழ்ந்துவந்திருக்கின்றன. சோழ பாண்டியர்களை ஒத்து விளங்கிய பழைய தமிழ்க் குடியினர் இச்சேரர்கள் என்பது மேற்கூறியவற்றாலும் நன்கு விளங்கும். இவர்கள் பேசிவந்ததும் போற்றிவந்ததும் தாய் மொழியாகிய தமிழே.

மலையாளம் உபபாஷை

இத்தமிழ் திரிந்து மலையாளமாய்ப் பரிணமிக்கத்தொடங்கியது கி. பி. 10-ம் நூற்றாண்டிலாகும். இக்காலத்திற்குமுன் பல நூற்றாண்டுகளாகச் செழித்து வளர்ந்த தமிழின் ஓர் உபபாஷையே மலையாளமாம். 10-ம் நூற்றாண்டிற்குமுன் இத்திரிபு காணப்படவில்லை; மலையாளமொழியும் இல்லை. மூலத்திராவிடம் என்ற மலைவீழருவியினின்றும் தோன்றி, காலக்கிரமத்தில் நீர் ஏராளமாக நிறைந்து பெருக்கெடுத்துப் பாய்ந்து வந்த பேராறு தமிழாகும். பிரதேசநிலைமையால் இப்பேராற்றினின்று பிரிந்துபாயும் கிளைநதியே மலையாளமாம்.

ஆராய்ச்சியாளர் துணிவு

நான் இங்கே துணிந்த முடிபுகள் தமிழ்-மலையாளத்தொடர்பு பற்றி ஆராய்ந்த அறிஞர்களில் பெரும்பாலார்க்கு உடம்பாடேயாகும். மலையாளமொழியாராய்ச்சியில் தலைசிறந்துவிளங்கியவர்கள் புரொபஸர். ஏ. ஆர். ராஜராஜவர்மா. இவர்கள் தங்களது கேரளபாணினீயத்தின் பீடிகையில் இம்மொழித் தொடர்பினை விரிவாக ஆராய்ந்துள்ளார்கள். அதில் வரும் சில கருத்துக்களை இங்கே நோக்குவோம்.

1 மலநாடாய மலயாளத்திலே ஆதிநிவாசிகள் தமிழரும், அவருடெ பாஷ தமிழுமாயிருந்நு. (பக். 5)

2 மலயாளம் தமிழின்றெ ஒரு உபபாஷ. (பக். 13)

3 கொல்லவர்ஷ ஆரம்பகட்டமாய கிறிஸ்துவப்தம் 825-நு மேலே மலயாளம் ஒரு ஸ்வதந்த்ர பாஷயுடெ நிலயில் எத்தியுள்ளு. அதினெ கொல்லவருஷாரம்பத்திநு முன்புள்ள காலத்தெ மாதாவாய தமிழின்றெ கர்ப்பத்தில் வஸிச்சிருந்ந காலமாயி கணிச்சால் மதியாவும். (பக். 54)

4 பாலிகயாய கேரளபாஷயுடெ ரக்ஷகர்த்ரு ஸ்தானம் தமிழிநுதந்நே ஆயிருந்நு. (பக். 55)

5 சோழம், கேரளம், பாண்ட்யம் ஈ மூந்நு தேசங்ஙளிலே யும் பாஷ தமிழின்றெ வகபேதங்ஙளாண. (பக். 66)

இவைகளெல்லாம் நான் கூறிவந்த முடிபுகளும் அவற்றினின் றும் பெறப்படுவனவுமே யாகும். இப்பேராசிரியர் கருத்துக்கும் எனது கருத்துக்கும் இரண்டு வேறுபாடுகள் உண்டு. ஒன்று காலம்பற்றியது. கி. பி. 825-ல் அதாவது கொல்லம் ஆண்டின் தொடக்கத்தில்தான் மலையாளமொழியின் ஆரம்பம் என்பர் இவர். எனது கருத்தின்படி ஒரு நூற்றாண்டிற்குப்பின் அதாவது 10-ஆம் நூற்றாண்டிற்குப்பின் இவ்வாரம்பம் நிகழ்ந்ததாம். இதற்கு முக்கிய காரணம் 9-ம் நூற்றாண்டினரும் கொடுங்கோளூரில் அரசுபுரிந்த வருமான சேரமான்பெருமாள்நாயனார் தமிழிலேயே பாடியுள்ளார் என்பதே. இவர்காலத்தில் தமிழ்தான் மலையாளதேசத்தில் வழங்கி வந்தது. எனவே இவர்காலத்திற்குப்பின் 10-ம் நூற்றாண்டள விலே மலையாளமொழியின் தொடக்கத்தைக் கூறுதல்வேண்டும். கொல்லம் ஆண்டின் ஆரம்பத்திற்கும் மலையாளமொழியின் ஆரம் பத்திற்கும் யாதொரு தொடர்பும் கிடையாது. ராஜராஜவர்மா அவர்கள் குறித்த காலம் உத்தேசமேயன்றி வேறல்ல.

இரண்டாவது வேறுபாடு ஊன்றி நோக்குதற்குரியது. கி. பி. 10-ம் நூற்றாண்டிற்கு முந்தி சுமார் ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மொழியும் இலக்கியமும் வளர்ந்து பெருகிவந்திருக்கின்றன. சங்ககாலம் தமிழ் இலக்கிய சரித்திரத்தில் முதல் கட்டம் என்று சொல்லலாம். தேவாரகாலம் இரண்டாவது கட்டம் என்று கூற லாம். இந்த இரண்டாவது கட்டத்திலே திருக்குறள், சிலப்பதிகா ரம் முதலியன அடங்கும். இக்கட்டத்தின் இறுதிப்பகுதி 10-ம் நூற்றாண்டு. சோழராது ஆதிக்கியம் உச்சநிலையை அடைந்தது இக்காலத்தேதான். இக்காலம்வரை வளர்ந்துள்ள தமிழ்மொழியின் நிலையையும் இலக்கிய நிலையையும் நமது பேராசிரியர் மனத்திற் கொள்ளவேயில்லை. மலையாள மொழியின் பல்வேறு கட்டங்களை யும் நுணுகி ஆராய்ந்து அறுதியிட்டவர்கள் தமிழ்மொழியின் பல்

வேறு கட்டங்களையும் தெரிந்துகொள்ள முயலாதது பெருவியப்பாகும். இதனை நோக்கியிருப்பார்களாயின் இடைக்காலத்தின் இறுதியிலுள்ள தமிழினின்று பிரிந்ததே மலையாளம் என்பதை இனிது கண்டிருப்பார்.

பேராசிரியர் ராஜராஜவர்மா அவர்களையடுத்து, காலஞ்சென்ற உள்ளூர் ப மேசுவர ஐயரவர்களின் கருத்தை நோக்குவோம்.

> கோளத்திலும் அதின்றே கிழக்கன் பிரதேசங்ஙளிலும் பூர்வ
> காலங்ஙளில் ஒரு பாஷயே நடப்புண்டா யிருந்நுள்ளு என்நும்,
> ஆ பாஷ தமிழாயிருந்நு என்நும், மலயாளத்தே தமிழின்றே
> கனிஷ்ட ஸகோதரியெந்நல்ல புத்ரி யெந்நாண பறயேண்ட
> தெந்நும், இப்போழ் பரக்கே ஸம்மத மாயிட்டுண்டெ
> (பிராசீன மலயாளமாத்ருககள் i அவதாரிக பக். v)

இக்கருத்து எனது கருத்தோடு முற்றும் ஒத்துள்ளமை கூறவேண்டா. டாக்டர் குண்டர்ட் தமது மலையாளபாஷா வ்யாகரணத்தில் கூறுவது வருமாறு:—

> மலயாள பாஷ த்ரமிளம் என்நுள்ள தமிழின்றெ ஒரு
> சாக ஆகுந்நு அது தெலுங்கு கர்ணடகம், துளு, குடகு
> முதலாய சாககளெக்காள் அதிகம் தமிழருடே ஸூத்ரங்ங
> ளோடு ஒத்துவரிகையால் உபபாஷ யத்ரே

மேற்சுட்டிய மூவரைப்போன்று அத்தனை சிறப்பும் புகழும்வாய்ந்த பேராசிரியர்கள் மலையாளமொழிபற்றிய அளவில் அரியரென்பது கூறவேண்டா. டாக்டர் கால்டுவெல் திராவிடமொழிகளுக்கு ஒப்பு நோக்கு இலக்கணம்வகுத்தவர். இவரும் தமதுபெருநூலில் எனது கருத்துக்களையே ஆதரிக்கின்றனர்*.

---

*'The Malayalam language is not distinguished from Tamil by Sanskrit writers'—p. 17.

'It (Malayalam) might perhaps be regarded rather as a dialect of Tamil than as a distinct member of the Dravidian family'—p. 18.

'I consider it (Malayalam) to have been not a sister of Tamil, but a daughter'—p. 19.

பிற கொள்கை பொருந்தாமை

ஆனால், தற்காலத்தில் ஒரு சிலர் இக்கருத்துக்களை அங்கீகரிக்கவில்லை. மூலத்திராவிடமொழியிலிருந்து மலையாளம் நேரே பிறந்ததென்பர். பிராசீன மலையாள கவிஞர்கள் தங்கள் மொழியைத் 'தமிழ்' என்று அழைத்ததற்கு ஒருவர் வெகு விநோதமாக விளக்கம் செய்துள்ளார். இச்சொல் மூலத்திராவிடமொழிக்கும் பெயர்; அதினின்றும் கிளைத்த தமிழ்மொழிக்கும் பெயர்; ஏனைத் திராவிட மொழிகளுக்கும் பெயராம் என்றனர்! மூலத்திராவிட மொழி வெறுங் கற்பிதமொழி என்பதை இவர் மறந்துவிட்டார். அதற்குத் தமிழ் எனப் பெயருண்டென்பது இவர்க்கு எவ்வாறு தெரிந்தது? இப் போலிக்காரணங்களைக் கூறுதலினாலேயே, இது அபிமானம்பற்றிய கொள்கையென்பது நன்கு விளங்குகிறது. வேறொருவர் கூறுவதும் விநோதமாகவேயுள்ளது. முன்னிலையில் வேற்றுமையுருபேற்கும் சொல் ஒருமைக்கு—'உன்' என்றும் பன்மைக்கு 'உம்' என்றும் கூறி, இவையிரண்டுமேதான் தமிழில் ஆதிகாலத்தில் இருந்தனவாம் என்றனர். இவற்றின் பூர்வவடிவங்களாகிய நின், நிம் (நும்) என்பன மலையாளத்தில் மட்டுந்தான் உளவாம். எனவே, மலையாளம் தமிழ்மொழிக்கு முற்படத் தோன்றியதாம்! தொன்றுதொட்டு இன்று வரை நின், நும் என்பன தமிழில் வழங்கிவந்துள்ளன. நின்னும் நின்மலையும் பாடி' 'நும்கோ யாரென வினவின்' எனப் புறநானூற்றில் (130, 212) வருகின்றன.

தொல்காப்பியர் இவ்விருசொற்களையும் குறித்துள்ளார்.

'நீயென் னொருபெயர் நெடுமுதல் குறுகும்
ஆவயின் னகரம் ஒற்றுகும்மே' (உருபியல்—7)

'நும் என் னொருபெயர் மெல்லெழுத்துமிகுமே.' (புள்ளிமயங்-30)

என்பனவற்றைக் காண்க. ஆகவே, அடிப்படையையே இந்த அறிஞர் பிறழ உணர்ந்தார். மலையாளத்தில் நிம், நும் என்பன கிடையா. நிங்ஙள் என்பது பிற்காலத் தமிழ்வடிவமாகிய நீங்கள் என்பதன் திரிபாம். 'நூலவையார் போல் நீங்கள் நோக்குமினே' (சிந்தா. 1045) என்றதனை நோக்குக. வேறொன்று தங்கள்-தங்ஙள்

எனவும், வந்து-வந்நு எனவும் வருதல்போல, கொன்றான் என்பது கொந்நான் என மலையாளத்தில் வரமாட்டாதென்றனர். கொன்று என்பது கொந்நு என மலையாளத்தில் வருதல் மிகச் சாதாரணம். அன்றியும் இவ்வாறு கூறுவதன் பயன் யாது என்பது விளக்கமா யெழுதவில்லை. கடைசியாக, பெயரெச்சவினை அடுக்கிவந்து பெயர் கொள்ளும்போது, அந்த எச்சங்கள் தமிழிற்காணுவதற்கு முந்திய தொரு நிலையைத் தற்காலத்து நாடோடி மலையாளம் காட்டுகின்ற தென்று க்ரையர்ஸன் (Grierson) கருதுவதாகவும், அதனால் தமிழ்மொழிக்கு முற்பட்ட நிலையில் மலையாளமொழியுள்ளதாகவும் இவர் கூறுகின்றார். இதனை ஓர் உதாரணங்கொண்டு விளக்கியிருப் பின் பயனுடையதாகும். தமிழில் எத்தனையோ நெறிகளில் பெய ரெச்சங்கள் அடுக்கிவருகின்றன. வினையடிகளோடு 'உம்' சேர்ந்தும், 'உம்' 'உந்து' எனத் திரிந்தும், வினையடிகளே அடுக்கிவந்தும், பெய ரெச்சங்கள்தாமே அடுக்கிவந்தும், முன்புள்ள பெயரெச்சங்கள் வினையெச்சங்களாய்த்திரிந்து ஈற்றிலுள்ள பெயரெச்சத்தோடு முடிந்து பெயரைத்தழுவியும், பிறவாறுகவும் பெயரெச்சங்கள் அடுக்கிவருவனவாம். இவற்றில் அடங்காத நெறியொன்று மலையா ளத்திலிருப்பதாகத் தெரியவில்லை. இவை போன்றகாரணங்களால் மலையாளம் திராவிட மூலமொழியினின்றும் பிறந்த ஒரு தனி மொழியென நாட்ட முயன்றுள்ளார்!

முடிவு

மலையாளமொழி ஒரு கௌரவமான ஸ்தானத்தை இப்போது பெற்றுள்ளது. அதன் வினைவிகுதிகளும் வேறு சில இலக்கண நியதிகளும் மிகவும் போற்றத்தக்கன. அதன் லளிதமும் இனிமை யும் நாடோடித் தமிழின் இயல்பைப் புலப்படுத்திக்கொண்டேயிருக் கின்றன. தமிழறிஞர்கள் சங்கத்தமிழ்நடையில் எழுதுவதைக் கைவிட்டு மலையாள அறிஞர்களைப்போல் இன்றைய வழக்கிலுள்ள தற்காலத் தமிழைக் கையாண்டு எழுதி நமது மொழிக்கு உயிராற் றல்கொடுக்கவேண்டியது இன்றியமையாததாகும்.

(அகில இந்தியா ரேடியோவின் அனுமதியுடன் வெளியிடப்பெற்றது.)

உ

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் துணைத்தலைவர்
J. C. ஸ்ரீநிவாஸையங்கார் B.A., B.L. அவர்கள் மீது
நான்மணிமாலை

[இராமநாதபுரம் K. கணபதிசேர்வைகாரர் இயற்றியது]

காப்பு.

விநாயகர்

திருமங்கை மன்னன் திருவடியைப் போற்றி
வருமங் களச்சீனி வாசத்—திருவன்மேல்
பாடுகின்ற நான்மணிமா லைக்குப் பதந்தருகூத்
தாடிதந்த மூத்தபிள்ளை தான். (1)

சிவன்

கானங் கடந்து கடல்கடக்கக் காத்தவபி
மானன் மகிழ்சீனி வாசன்மேல்—யானுரைக்கும்
நான்மணிமா லைக்குவந்து நன்றாய்த் துணைசெய்வான்
வான்மதியஞ் சூடுபெரு மான். (2)

சத்தி

அன்று புவியளந்த மாலே யவதரித்தா
னென்று புலவோ ரெடுத்தேத்தும்—வென்றியுள்ள
மன்சீனி வாசன் மணிமாலை வாழவரும்
தென்றமிழ்நா டாளுஞ் சிவை. (3)

திருமால்

தேசமெல்லாங் கொண்டாடுஞ் சீனிவா சன்மதுரை
வாசனுக்கு நான்மணி மாலைதர—வீசுபுகழ்ச்
'சேது பதி'போற்றிசெயும் தெய்வச் சிலையான் பொற்
பாதுகைதான் காக்கப் படும். (4)

முருகவேள்

கத்திக் கதறுங் கரியின் றுயர்தீர்த்த
சத்தியவான் சீனிவா சன்மீது—நித்திலஞ்சேர்
மாலையென்ன நான்மணி மாலைசொல்ல வந்தருள்வான்
வேலையிலே வேலெறிந்த வேள். (5)

நாமகள்

செந்தமிழாஞ் செந்நெல் விளையும் வயல்செங்கோல்
மைந்தன் றிருச்சீனி வாசனுக்குச்—சுந்தாஞ்சேர்
நான்மணி மாலைதர நாமகளின் செய்யவிரு
கான்மலர்கள் எந்நாளுங் காப்பு. (6)

மாணிக்கவாசகர்

நான்மறையோன் நற்சீனி வாசன்மேல் நானுரைக்கும்
நான்மணிமா லைக்குவரம் நல்குவான்—ஊனிடர்போம்
ஆணிப்பொன் னம்பலத்தி லாடுந் திருவடிவாழ்
மாணிக்க வாசகன்முன் வந்து. (7)

அன்னதாதாசேதுபதிகள்

புன்னை மலர்ப்பொழில்சூழ் புல்லாணி வந்துதித்த
மன்னன் புகழ்ச்சீனி வாசனுக்குக்—கன்னலென
நாவலர்சொல் நான்மணி மாலைதர என்சேது
காவலவர் சொற்றுணை யென்க. (8)

சொல்—உணவு

நூல்.

நேரிசைவெண்பா

திருமாது மார்பன் றிருவடியைப் போற்றும்
பெருமான் கவிராயர் பேசும்—பெருமையுள்ள
புல்லாணி வாழ்சீனி வாசன் புவித்தேவர்
பல்லா யிரவர் பதி. (1)

கட்டளைக்கலித்துறை

பதினுன் குலகத்து மிவ்வுல கேபெரும் பாக்கியஞ்சேர்
நிதிநான்கு வேதபா ராயண மூர்த்தி நெடியமணி
மதிஞன்கு சூழ்மது ராபுரி வாசிபுல் லாணிவந்த
பதிநான் புகழ்சீனி வாசனை யீன்று பலன்பெற்றதே. (2)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

பெற்றவரைத் தேடிவரும் பிள்ளையுல கிற்பெரிய பிரபு வானல்
கற்றவர்கள் தேடிவரு வார்களிது கைகண்ட காட்சி யாகும்
பெற்றவரும் கொடைகொ டுக்கும் பெரும்பிரபுவும் புல்லாணிச்சீனி வாசக்
கொற்றவனே யாகிவிடில் மற்றவரைத் தேடுவது கொழுப்புத் தானே. (3)

நிலைமண்டலவாசிரியப்பா

கொழுங்கயற் கண்ணி கோகநக மங்கை
தொழுங்கடல் வண்ணன் துணையடி மலர்கள்
முடிமிசை யணிந்து படிமிசை வாழும்
ஞாய வாதி நான்மறை யாளன்
தூய நெஞ்சன் சொன்னசொற் கடவான்
கற்பக தாரு கவிரா யர்க்குப்
பற்பல காவியம் பகரும் பண்டிதன்
கருணை நோக்கம் கைப்பிடித் திருப்போன்
திருமணம் பொலியும் பெருமனை வாழ்க்கைப்
புல்லாணிச் சீனி வாசன் புவிக்கு
நல்லாணி முத்தென நவிலுதல் நலமே. (4)

நேரிசைவெண்பா

நவிலுங் கொடையாளன் நான்மறை யாளன்
செவியைத் தமிழ்க்குதவுஞ் சீமான்—புவியரசர்
கொண்டாட வாழ்சீனி வாசனைப்போய்க் கும்பிட்டுக்
கண்டாலும் போமே கலி. (5)

கட்டளைக்கலித்துறை

கற்றவர் வாழ்த்துங் கருணு கடாக்ஷன் கயற்கணியென்
பெற்றவள் வாழ்மது ராபுரி வாசன் பெருங்கொடையோ
டுற்றவனின்பந் தருஞ்சீனி வாசமன் ஒன்னலர்கள்
அற்றவனே சூதுவா தக ஞனுமிக் கற்றவனே. (6)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

அன்றாலிற் பள்ளிகொண்ட வரசே யிந்த
ஆர்கலிசூழ் வையகத்தில் அரசாய்த் தோன்றி
என்றாலி காத்தருளுஞ் சீனி வாசன்
எல்லார்க்கு நல்லவன்ற னிடத்திற் சென்று
முன்றானை யேந்திவிடில் முழுமா ணிக்கம்
முத்துநிறை யன்புகொண்ட மூட்டை தூக்கிக்
கன்றாத மனத்துடனே மீள்வார்க் காணுங்
கண்ணிரண்டும் புண்ணியஞ்செய் கண்க ளாமே. (7)

நிலைமண்டலவாசிரியப்பா

கண்ணக விலத்து விண்ணவ ரறியாத்
திருவடித் தெரிசனை தருமணி வண்ணன்
அருள்குடி கொண்டிடுந் திருமுக மண்டலம்
கிழக்கே நோக்கிய வழக்க மாகி
நின்றதிருக் கோல நெடியோன் வாழும்
மன்றலம் பொழிலிற் றென்றல்வந் தடிக்கும்
புல்லாணை வந்த கல்யாண குணவேள்
செந்தமிழ் விளைபுலஞ் செழிக்கப் பெய்யுஞ்
சுந்தர முகிலென் வந்தனங் கொள்வோன்
மைத்தடங் கண்ணியர் மடலூர் மன்மதன்
நித்தியம் நேம நிஷ்டைகள் தவறான்
சீனி வாசகச் சீனி வாசப்
புண்ணிய மூர்த்தி பூமியி லிருக்க
எண்ணிய நினைவுக் கெக்குறை யுண்டே. (8)

நேரிசைவெண்பா

உண்டு களித்திடலாம் உள்ளம்போல் வாழ்ந்திடலாம்
கண்டுவிழி பெற்றபலன் கைக்கொளலாம்—தண்டுளவத்
தாரான் புயன்சீனி வாசன் றிருமுகத்தை
நாராயண னெனவே நாம்.

கட்டளைக்கலித்துறை

காட்டும் புகழ்ச்சீனி வாசனைப் போற்றமிழ் நாவலர்சொல்
பாட்டின் பொருளை யுணர்பவ ரார்பெரும் பட்டமுற்றுக்
கோர்ட்டில் நுழைந்தவக் கீலென்று சொல்லிய கூட்டமதிற்
சூட்டுந் தொடைமணம் மூக்கிருப் பார்க்குச் சுகந்தருமே. (10)

அறுசீரடி ஆசிரியவிருத்தம்

தருவது தருவென் பார்க்குத் தம்பிரான் சொல்விக் கொள்வேன்
விரிகட லுலகிலெந்த வித்துவான் கண்டு கேட்டார்
ஒருபிடி யன்னம் பெற்றார் உண்டெனில் உரையின் எல்லாந்
தருவது சீனி வாசத் தருவிது சாக்ஷி தானே. (11)

நிலைமண்டலவாசிரியப்பா

தானவர் தலையைத் தன்னுதற் கெண்ணி
வானரர் தொடரக் கானகங் கடந்து
புல்லணைக் கிடந்தோன் பொன்னடித் தொண்டன்
அல்லியம் பொகுட்டில் அயன்போல் நான்கு
வேத மோதும் மாதவப் பூசுரன்
பூமகள் நாமகள் பொருந்தி வாழும்
மாமனை யுள்ள மண்ட லாதிபன்
முத்தமிழ்ச் சங்க வித்துவான் களுக்குப்
பத்தரை மாற்றுத் தங்கப் பதக்கம்
சித்தங் களித்துக் கொடுக்குஞ் சீமான்
உத்தியோ கஸ்தர் ஒன்பது கோடி
நித்தியம் வணங்கும் புத்திமான் நெடிய
நான்மாடக் கூடல் வக்கீல் நாயகம்
சீனி வாசன் செய்ய சமுகம்
கண்டால் போதுங் கவலை நீங்கும்
பண்டா லிலையிற் பள்ளி கொண்ட
புண்டரீ காக்ஷப் புண்ணியன் இவனே. (12)

நேரிசைவெண்பா

இவளுயிரைக் காக்க வெழுந்திருப்பா யன்றேல்
இவளுயிராம் மாலைதனை யீவாய்—இவளோபுன்
மாலைவந்தா லென்சீனி வாசன்வந்தா னென்பாள்
காலைவந்து கண்டுகொண்டேன் காண். (13)

கட்டளைக்கலித்துறை

காணாத பேர்களைக் கண்டுகொண் டாலென்ன காரியமாம்
வீணாளைப் போக்கித் திரிகின்ற வித்துவ வேந்தர்களே
பூணார மார்பன் மணிச்சீனி வாசன் சபைபுகுந்தால்
காணாமல் அள்ளி வரலாம் பலவித நாணயமே. (14)

அறுசீரடியாசிரியவிருத்தம்

நானிலத் துள்ளார் யார்க்கும் நன்மையைத் தேடி வாழும்
சீனிவா சையங் காரின் சிந்தையே சிந்தை மற்றக்
கானில்வாழ் கழுதைபோலக் கத்துவார் சிந்தை யெல்லாம்
ஈனர்கள் கூடுஞ் சந்தை மொந்தைகந் தையென் பேனே. (15)

நிலைமண்டலவாசிரியப்பா

என்னுள மிருக்கும் ஈசுவரன் உமையாள்
மன்னும் பாகன் மணிவிடை யூர்தி
கால காலன் கங்கைச் சடையான்
நீல கண்டன் நெற்றிக் கண்ணன்
மலையத் துவசன் மருமக னாகி
அலைகடற் புவியை யாளுஞ் சொக்கனும்
வருணன் பொருட்டுக் கருணை கூர்ந்து
சர்ப்ப சயனந் துறந்து தனியே
தர்ப்ப சயனந் தழைக்க வந்த
ஆரா வமிர்தம் நாரா யணனும்
சீனி வாசச் சீமான் றனக்கு
நீண்ட வாயுள் வேண்டிய செல்வம்
கொடுக்கும் படிக்குக் கும்பிடு வேன்வேல்
எடுக்கும் பெருமான் இணையடி மலரையே. (16)

நேரிசைவெண்பா

மலைமேல் முகிலெழுந்து வந்துவிட்ட தையோ
முலைமே கலையவிழும் மோகந்—தலைமீறிக்
கொண்டதடி சீனிவா சையங்கார்க் கென்குறையைக்
கண்டுசொல்லு வாயென் கருத்து. (17)

கட்டளைக்கலித்துறை

கரந்தூக்க நிற்கும் கவிராயர் வந்திடக் கண்டுகொண்டால்
சிரந்தூக்கி நின்று செவிகொடுப்பான் தங்கச் சேர்கொடுப்பான்
இரந்தூக்கிய மின்றிய நெஞ்சகத் திற்றிரு வேற்றிவைப்பான்
பருந்தூர்தி பாதந் தொழுஞ்சீனி வாசப் பருணிதனே. (18)

அறுசீரடியாசிரியவிருத்தம்

பனிமதிய மணிசடிலப் பரமசிவன் பங்கயத்தான் பழவ யோத்திக்
குனிசிலைக்கை ராமனிவர் கூடியொரு பெருங்கூட்டங் கூடச் செய்தே
இனியிவனே பூதலத்துக் கிறைவனென எல்லாரு மியர்ப என்றன்
சனிவிலக்க வந்துதித்த சீனிவா சையங்கார் தழைக்க மாதோ. (19)

நிலைமண்டலவாசிரியப்பா

மானி னேர்விழி மங்கையர் பாடும்
தேனினு மினிய கானம் பருகிக்
கிள்ளை தனது பிள்ளைக் களிக்க
வெள்ளை யன்னங் கள்ளத் தனமாய்க்
கேட்டுத் தன்னுயிர்ப் பேட்டுக் கருத்தி
மாகனக மபமாங் கோகனக வீட்டிற்
கூடிக் குலாவி நாடக மாடும்
அன்ன வயலும் புன்னையம் பொழிலும்
மாட மாளிகைக் கூடகோ புரமும்
முத்தமிழ்ச் சங்க வித்துவக் கோட்டியும்
ஆழ்வா ராதிகள் அருளிய பாசுரம்
நாலா யிரமும் நான்கு வேதமும்
பாரா யணஞ்செய் சீரார் வீதியும்
இராவ ணன் றலைகள் இராவணஞ் செய்ய
அராவணை நீங்கி அயோத்தியிற் பிறந்த
நீர்கொண்ட மேகம் நெடியோன் கோவிலும்
தேர்கொண்ட விழாவின் திவ்விய சேவை
ஓங்கும் புல்லணை தாங்க வந்தோன்
கல்லார் மனதில் நில்லாப் புனிதன்
கருங்கடல் வண்ணன் கழலைப் பணிவோன்
பெருங்கொடை யாளி பிரபல வக்கீல்
சீனி வாசன் செந்தமிழ்க் குரிசில்
நானிலம் புகழ வூழிவா ழியவே. (20)

நேரிசைவெண்பா

நாதியற்ற பேர்க்கினிய நாதனென மார்தட்டி
ஊதியத்தைத் தந்தருளும் உத்தமவான்—நீதியுற்ற
சீனிவா சையங்கார் செந்திருவாழ் மார்பனைப்போல்
நானிலத்தில் வாழி நமக்கு. (21)

கட்டளைக்கலித்துறை

கலந்தருஞ் சங்கந் தருஞ்செந்நெ லோங்கிடும் நன்செய் புஞ்செய்த்
தலந்தருந் தண்டிகை தான்றருந் தங்கத் தவிசுதரும்
பலந்தரும் த்ரேகப் பணிதரும் பீதாம் பரந்தரும்பொற்
கலந்தரும் பொன்னி னருட்சீனி வாசநற் கற்பகமே. (22)

எண்சீரடியாசிரியவிருத்தம்

கற்றவரே நீரரிய கவியைப் பாடிக்
கண்கெட்ட மூடர்களைக் கண்டு கொண்டால்
மற்றவர்தா னஃதறியும் மார்க்க முண்டோ
மருந்தருமை தெரிந்திடுமோ மடநாய் தானும்
நற்றமிழின் சுவைதெரிந்து நம்மைக் காக்க
நான்முகனும் புல்லாணி நகரி யாளுங்
கொற்றவனுஞ் சீனிவா சையங் காரைக்
கொடுத்திட்டான் அன்னவன்பாற் குறுகு வாமே. (23)

நிலைமண்டலவாசிரியப்பா

குடிக்குக் கூழு மில்லையே யிடுப்பில்
உடுக்கத் துணியு மில்லையே யுலகில்
படுக்கப் பாயு மில்லையே பாவிகள்
அடிப்பா ருண்டிங் காதரிப் பாரிலை
கடுஞ்சொற் சொல்லுங் கடன்கா ரப்புலி
நடுங்கப் பாயில் நானென் செய்வேன்
காப்பா யினியொரு கதியிலை யென்னக்
கைகட்டி நின்று கரங்குவிப் பாரை
மெய்கட்டித் தழுவி மெத்தை விட்டளித்துப்
பாலுஞ் சோறும் பரிந்தினி தருத்தி

வேல்விழி யார்கள் விசிறி வீசச்
சேது பதிபோற் சிறப்புற் றோங்க
ஓது பதினென் குலகும் வாழ்த்தப்
பரிசு கொடுக்கும் பருணிதப் பாரி
சீனி வாசச் சீமான் பிறந்த
நகரி யாதெனிற் பகரக் கேண்மின்
முத்து நகையார் குத்துத் தனத்தில்
அப்பிய சந்தனம் எப்பொழுதுங் கமழ்
பொய்கை சூழ்திருப் புல்லாணி யாமே. (24)

நேரிசைவெண்பா

ஆரா வயிர்தாங் கவிசை யவர்க்களித்தால்
பாரான் பதவி பரிசுதரும்—சீராமன்
சங்கம் புரக்குந் தருசீனி வாசனுக்கு
மங்கள முண்டாகு மாம். (25)

கட்டளைக்கலித்துறை

ஆரே நினது பெயருரை யாதவர் அம்புவியில்
பாராளுஞ் சேது பதியுரைப் பான்படிப் பாருரைப்பார்
வாராளுங் கொங்கை மடவா ரெழுது மடலுரைக்கும்
தாராளமான கொடைச் சீனி வாசத் தயாநிதியே. (26)

அறுசீரடியாசிரியவிருத்தம்

தமருகந் தட்டிக் கையிற் றலைபோட்டை யேந்திக் கங்கைச்
சுமையுடன் பிச்சை வாங்கச் சொன்னதார் சிவனைப் பன்னாள்
அமரர்கள் தொழும்புல் லாணி அச்சுத னடிமை யான
தமர்புகழ் சீனி வாசத் தாட்டிக விருக்கத் தானே. (27)

நிலைமண்டலவாசிரியப்பா

தாதவிழ் தாமரைத் தையல் போலும்
மாதர் கூடி மாகத மேடையில்
உத்தம மான நித்திலம் பவளம்
பந்துக ளாகச் சுந்தரக் கையால்
அடிக்கும் போதவை யெடுத்துக் கொடுக்க

வானரப் பெண்களை வரிசைப் படுத்தி
வைத்தகி லவர்கள் இச்சை கொண்டு
கச்சி லொளித்து வைச்சுக் கட்டித்
திருவிளை யாட்டுத் தீர்ந்த பின்னர்க்
கருவிழி மங்கையர் கலைந்து போய்த்தம்
நாயக ரிடத்து நல்க வேய்கரும்
முத்தே தொத்தில் முளைத்த துகிரே
பைத்தலை நாகப் பருமணி யேநீ
என்பால் வைத்த அன்பால் தந்த
இந்தப் பொருள்கள் இலங்கை தேடி
உந்தி பூத்தோ னுடன்செலுஞ் சமயம்
புன்னைப் பொழில்சூழ் புல்லணை நகருள்
முன்னைத் தவத்தால் அன்னை வயிற்றில்
கருவுரு வாகும் போதே கண்ணன்
திருவடித் தொண்டு தெரிந்து கொண்ட
சீனி வாசச் சீமான் வீட்டினில்
போனக முண்ணப் போன போது
வாசற் படியில் இவ்வளை கண்டேன்
ஆசைக் கடற்கோ ரளவைக் காணேன்
பதும நாதன் பக்கத் திருந்தால்
இதுபெருந் தப்பென் றெண்ணிக் கொண்டேன்
அற்புத மற்புத விற்பொலி நுதலி
கழுத்தணி யாகக் கட்டிக் கொள்வாய்
வழக்கெடுத் துன்பால் வரவே மாட்டார்
ஆதலா லெனது காதலி மனதில்
அச்ச மென்பதை யகற்றி விடுவாய்
என்று பேசும் வென்றிவா னரங்கள்
குன்றினு முயர்ந்த கோபுரந் தோறும்
நாடக நவிற்றும் பாண்டி நாட்டின்
வளத்தைச் சேடனும் வழுத்துதல் அரிதே. (28)

நேரிசைவெண்பா

அரிய விருபொருளு மள்ளியள்ளி யீயத்
தெரிய வொருபிரபு தேடில்—அரியயனும்
வள்ள லருட்சீனி வாசனைப்போய்க் கண்டுகொண்டால்
விள்ளுவா னென்பார் விரைந்து. (29)

கட்டளைக்கலித்துறை

விரும்புஞ் சபைநடு வேபடித்தார் கள்முன் வீற்றிருந்து
கரும்புக் கினிக்க மணிவாய் திறக்கும் கனதனவான்
பெரும் புண்ணியம் பெற்றுவாழ் சீனிவாசனற் பேர்சொல்லுவார்
விருந்துண்டு சந்தனம் பூசி யுலாவரும் வேதியரே. (30)

அறுசீரடியாசிரியவிருத்தம்

வேதியர் விரும்பிக் கேட்க விரிஞ்சனார் தந்த ஞாய
வாதி யாஞ் சீனிவாசன் மதுரைமா நகரி வாசன்
ஆதிபன் திருப்புல் லாணிக் கயோத்திமுன் னாண்ட ராமன்
சீதள வதனங் கண்டால் திருமகள் நயவுண் டாமே. (31)

நிலைமண்டலவாசிரியப்பா

தமிழ்மணங் கமழும் இமிழ்திரை வையைத்
துறைதொறும் புதுமணத் தோகையர் கூடி
நிறைபுன லாடும் நேர்த்தி கண்டு
தவளத் தாமரைத் தவிசி லிருக்கும்
பவளக் காலனம் பச்சை மயிலுடன்
எட்டிப் பார்க்க இளமுலை யார்கள்
மட்டவிழ் குழலால் மறைத்துக் கொண்டு
வானர வரசை வாவெனக் கூவி
மானுட மடவா ரல்லேம் யாங்கள்
வானவர் மக்கள் வந்தோ மிவ்விடம்
ஈனப் பிறவி யெடுத்தபிணி முகங்கள்
அஞ்சிறை விரித்துப் பஞ்சடி நோவ
நடந்து மாடியு நகையது செய்தன
கடம்பொழி களிறும் உடம்பெலாம் வெளுத்த

கொக்குங் கிளியும் கோகிலங் களுமாப்
பக்க மிருந்து பார்த்திருப் பார்கள்
பெண்ணென் றாலோ பேதையு மிரங்கும்
அண்ணன் நீதான் யாரிடஞ் சொல்வோம்
விசாரிப் பாயென உசாவிப் பிடித்துப்
புட்களைக் கேட்கக் கட்கினி தாகிய
நீர்விளை யாட்டில் நெடுங்கண் ணிமைப்பதும்
பாரக மடிகள் பரவி நிற்பதும்
வண்ண மாலை வாருவ துங்கடுங்
கண்ணால் யாங்கள் கண்டோ மில்லை
பூதல மகளிர் போல வில்லையாம்
மாதர்க ளென்று மதிக்கப் பெற்றோம்
உள்ளதைச் சொன்னோம் வெள்ளறி வுடையேம்
காத்தருள் வாயெனக் காலைப் பிடிக்கத்
தீத்தொழில் புரிந்தோ ராயினும் வேத்திடம்
உண்மை வார்த்தை உரைத்தி ராதலால்
பெண்ணமிர் தங்கள் கண்கசங் காமல்
போகச் செய்வன் நீவிரும் போமெனத்
தண்டலைக் கேகி வண்டமர் குழலுடன்
சுகித்து வாழும் மகத்துவம் பொருந்திய
மதுரை நகருள் வசிக்கும் புண்ணியன்
விதுரன் வீட்டில் விருந்தாய் வந்தோன்
புல்லணைச் சினி வாசப் புனிதன்
நல்லவர் மனத்தில் மெல்லென வசிப்போன்
ஆழி புடைசூழ் அவனி மீது
ஊழி யூழி வாழிய வுவந்தே. (32)

நேரிசைவெண்பா

வாங்கப் பிறந்தோம்நாம் வள்ளலிடம் நம்மையவன்
தாங்கப் பிறந்தான் தயாநிதியாய்ப்—பூக்கமலப்
பொன்னிருந்து வாழும் புயன்சீனி வாசனொரு
கன்னனென்று சொல்வேன் களித்து. (33)

கட்டளைக்கலித்துறை

கனகாம் புயத்தியும் மீனும் பிகையும் கருணைசெய்து
மனதாரத் தந்திட்ட மாணிக்க மேகன் மதிப்புலவோர்
இனவான னங்கள் விகசிக்குந் தட்பவி ரவியெனுந்
தனதா சதுர்மறை வாழ்சீனி வாசனே தாங்குதியே. (34)

அறுசீரடியாசிரியவிருத்தம்

தாதவிழ் கமல வாழ்க்கைத் தந்தையின் தந்தை யான
சீதரா திருப்புல் லாணிச் சீனிவா சையங் காரை
நீதயை செய்து காப்பா யென்றிடல் நியாய மாமோ
காதலன் றன்னைக் காத்தல் தாதையின் கடமை தானே. (35)

நேரிசையாசிரியப்பா

கங்கைச் சடையான் கண்ணுதற் கடவுள்
அங்கயற் கண்ணி மணாளன் வெங்கயம்
உரித்த மூர்த்தி கரிக்குரு விக்கு
முத்தி தந்த முதல்வன் முன்னால்
முத்தமிழ்ச் சங்கம் முழங்கும் மதுரையில்
விறகு சுமந்து விற்றதும் வளையல்
பிறைநுத லார்க்குப் பேசிக் கொடுத்ததும்
வலை வீசியதும் வயிற்றின் பொருட்டாய்
ஊர்தொறும் பிச்சைக் கோடி யலைந்ததும்
யாரறி யாதார் வார்கட லுலகில்
பாணன் பொருட்டு நாண மின்றிச்
சேரனுக்குச் சீட்டுக் கொடுத் தான்
திருப்புல்லாணிச் சீனி வாசனை முன்
கருப்பணி யிருந்தால் கவலை யில்லையே!
எல்லாம் வல்ல சித்தனென் றவனைச்
சொல்வதி லென்ன சுகமோ தெரியேன்
பூசுரன் பிறந்த புண்ணியத் தாலே
தேசமெல்லாஞ் செங்கோ லோங்க
அண்டர் நாத னறிந்து கொண்டதால்
தானே கா தருந் தோன்
தேனமர் தெரியல் திருவா ளனையே. (36)

நேரிசைவெண்பா

தித்திக்குந் தெய்வச் சிலையான் திருவடியைச்
சித்தத்தில் வைக்குஞ் சிரஞ்சீவி—முத்தமிழைக்
காக்கின்ற சீனிவா சப்புனித கற்பகத்தைப்
பார்க்கப் பசிபறக்கும் பார். (37)

கட்டளைக்கலித்துறை

பாராளுஞ் செல்வப் படைக்குங் குபேரனற் பத்தியொடும்
சீராமன் பாதந் தொழுஞ்சீனி வாசன் திருமனைக்குள்
ஆராகிலும்புகுந் தாலழைத் தன்ன மருத்திப் பின்பு
நீரா ரிவண்வந்த காரண மேதென்று நேசிப்பரே. (38)

அறுசீரடியாசிரியவிருத்தம்

பஞ்சணையிற் கண்ணுறங்காள் கெஞ்சணைப்பாள்
தலையணையைப் பஞ்ச பாணன்
வஞ்சனையா லவளுடைய வயிற்றெரிச்சல்
பார்த்துவிடில் வடியுங் கண்ணீர்
அஞ்சலென முன்னிற்பா யன்றேனின்
திருமாலை யருள்வா யந்தோ
தஞ்சமவள் புல்லாணிச் சீனிவாசேந்திரநீ
தயை செய் வாயே. (39)

நிலைமண்டலயாசிரியப்பா

தண்டமிழ்ப் பொதிகைச் சந்தனக் க
தெண்டிரை வே......ண் திறைதரும்......
திருமுகங் கலை ... ...
இலங்கையி லிருக்குங் கலங்க ....
... ...
... ... (40)

குறிப்பு:—இத்தொகுதியின் முதற்பகுதி தலைத்தலைவர் நினைவு மலராக வெளிவந்தது. தலைத்தலைவர் மீது பாடப்பட்டதும் இதுவரை அச்சில் வாராததுமான இந்நான்மணிமாலையும் அவர் பெருமைகளை இனிதுவிளக்குதலாற் செந்தமிழ் நேயர் இதனையும் படித்தின்புறுமாறு வெளியிடலாயிற்று.—பத்திராசிரியர்.